குண்டூசி

பிப்ரவரி.. எட்டு அணா

661
661
1.52
383

தாய் உள்ளம்

டைரக்ஷன். ராம்நாத்

நாராயணன் கம்பெனி தயாரிப்பு

மலேரியா அவனை

பாழ்படுத்திவிட்டது

‘பாலுட்ரின்’ இருக்கையில்

எனக்கு மலேரியாவைப்

பற்றிய பயமில்லை

நாள் கணக்கில் ஜுரமடித்துக்கொண்டிருந்தால் எத்தனை கஷ்டமாயிருக்கும்! பாவம் அவன் சக்தி முழுவதும் இழந்து வாழ்க்கையிலேயே பற்றுதல் அற்றுப்போய் விட்டான் என்றால் அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அவன் அதற்கு என்ன செய்கிறான் என்பதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. தினம் ஒரு மாத்திரைவீதம் 3 அல்லது 4 நாட்களுக்கு அவன் ‘பாலுட்ரின்’ சாப்பிட்டால் சுலபமாகக் குணமடையலாமே! மேலும் ‘பாலுட்ரின்’ மலேரியாவைத் தடுக்கிறது. நான் ஒரு ‘பாலுட்ரின்’ மாத்திரையை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சாப்பாட்டுக்குப் பிறகு தவறாமல் உட்கொள்வதால் எனக்கு மலேரியாவைப்பற்றிய பயமில்லை.

பாலுட்ரின்*

டிரேட் மார்க்

மலேரியாவுக்கு ஓர் அற்புதமான மருந்து

* அணுவுக்கு ஒரு வில்லை

இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லிமிடெட்

IK-P 140 TM

"லக்ஸ் டாய்லட் சோப்

என் சருமத்திற்கு விசேஷ நன்மையளிக்கிறது"

என்று சொல்கிறுர்

பி.எஸ். ஸரோஜா

இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச்செய்யும்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 324-50 TM

MADRAS

பிரிய சகோதரிகளே!

நான் ஒரு நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஒரு குடித்தனப்பெண், எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது, வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது, வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது; இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஒரு சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி,

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க : இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

134132

BIBI CHARAN PIARI

SANT NAGAR :: (G. N.) JULLUNDUR CITY.

அழகோடு உழைப்பும் சேர்ந்தது

ரீஸா ரேடியோ

I. ● உயர்ந்த நாத இனிமை
● நம்பகமான சிறந்த உழைப்பு
● 'மாஜிக் ஐ' பொருத்தப் பெற்றது.

II A W. 7, ஏஸி., 7 வால்வு,
விலை ரூ. 525.



SUNBEAM

ரீஸா கம்பெனி

36, ஹாரிங்டன் ரோட், சென்னை-10.

தந்தி ASSEMBLER
த. பெட்டி : 1004

PHOENIX



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1—15—0;
3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும், நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

விலாஸ மாறுதல்

இது நாள் வரை கோவையில் வசித்துவந்த பிரபல ஹாஸ்ய நடிகை **எம். எஸ். எஸ். பாக்கியம்** தம் வாசஸ்தலத்தை சமீபத்தில் சென்னைக்கு மாற்றிக் கொண்டிருக்கிறார்.

—: புதிய விலாஸம் :—

எம்.எஸ்.எஸ்.பாக்கியம்
1-A ரங்கநாதன் செட்டி ரோடு,
நுங்கம்பாக்கம்,
சென்னை - 6.

ஐந்தே ரூபாய்க்கு

ரேடியோ ஸெட்

பேட்டரியோ, மின்சாரமோ இல்லாமல், சுலபமாகக் கையாளக் கூடிய "கிரிஸ்டல் ஸெட்".
விலை ரூபாய் 5 தான்.

எம் வியாபார விரிவுத் திட்டத்தைப் பிரசித்தப் படுத்துவதற்காகவே இந்தக் குறைந்த விலைக்கு அளிக்கிறோம். ஸ்டாக் கொஞ்சமே உள்ளது. ஒருவருக்கு ஏககாலத்தில் 2 ஸெட்டுகளுக்கு மேல் கொடுக்கப்படமாட்டாது. ஏமாறுமலிருக்க உடனே எழுதுங்கள்.

GENERAL NOVELTY STORES Ltd.,
DELHI.

குண்டூசி

பிப்ரவரி, 1952.

இந்த ஊசியில்

சினிமா உலகில் புரட்சி *(தலையங்கம்)* 5
சர்வ தேச பில்ம் விழா 6
நடனம் ஆடினர் —"*நந்தி*" ... 8
கே. ஆர். ராமஸ்வாமி, பத்மினி *(ஆர்ட் படம்)* ... 9
எம். எஸ். திரௌபதி *(வர்ணப் படம்)* ... 10
எம். எஸ். திரௌபதி *(வாழ்க்கை வர்ணனை)* ... 11
நுனிப்புல்—"*வெட்டுக்கிளி*" ... 16
"அம்மா" *(பட விமர்சனம்)* ... 21
தாய் உள்ளம் *(படக் காட்சிகள்)*... 25
குண்டூசியைக் கேளுங்கள் ... 29
நக்ஷத்திர கிரிக்கெட் *(படங்கள்)* ... 33
இது செய்தி 38
செய்திப் படங்கள் 43
பொதுஜனம் பேசுகிறார் 47
யுகோஸ்லேவிய சினிமா 51
புஸ்தகப் பொழுது *(புஸ்தக விமர்சனம்)* ... 53
குமாரி நளினி —'*வஸந்தன்*" ... 55
ஜானகி *(வர்ணப் படம்)* ... 59
கே. மாலதி *(ஆர்ட் படம்)* ... 60
பிரம்மலோகம் *(ஸ்டுடியோச் செய்திகள்)* ... 67
குண்டூசி டைரி 68

வருஷ சந்தா:

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி:

இந்தியா: 8 அணா. வெளிநாடு 12 அணா.
இலங்கை: 50 சதம்.

குறிப்பு:—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத் துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

குண்டூசி

பட்டை 5
ஊசி – 5
பிரதி – 53

பிப்ரவரி
1952

ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால்

சிறந்த விஷயங்களுள்ள மாத சினிமாப் பத்திரிகை

சினிமா உலகில் புரட்சி!

இந்திய சினிமா உலகில் ஒரு பெரும் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. நம்ப முடியாத விஷயங்களெல்லாம் சமீப காலத்தில் சர்வ சாதாரண நிகழ்ச்சிகளாக மாறி வருகின்றன.

முன்பெல்லாம் தென் இந்திய சினிமா வடக்கு நோக்கி வந்தது. இப்பொழுதோ வட இந்திய சினிமாத் தொழில் தெற்கு நோக்க ஆரம்பித்திருக்கிறது. "சந்திரலேகா" காட்டிய வழியைப் பல தமிழ்ப் பட முதலாளிகள் பின்பற்றி வருகின்றனர். தமிழ் நாட்டிலிருந்து ஹிந்தியில் தயாராகும் படங்களுக்கு வடக்கே தனி மதிப்பு ஏற்பட்டு வருகிறது. இது மட்டுமா; மேல் நாட்டினர்கூட இந்தியா பக்கம் திருப்பி யிருக்கின்றனர். நம் பட முதலாளிகள் வட இந்திய பிலிம் மார்க்கெட்டைக் கைப்பற்றியது போதாதென்று, ஆங்கிலத்தில் படத்தைத் தயாரித்து, சர்வதேச பிலிம் மார்க்கெட்டையும் கைப்பற்ற முனைந்திருக்கிறார்கள்.

நக்ஷத்திரங்களாகியுள்ளவர்கள் சமூகத்திற்குப் பயன் தரத்தக்க பொதுச் சேவைகளில் ஈடுபடவோ, தாராளமாய் பொருள் உதவி செய்யவோ மாட்டார்கள் என்ற நிந்தனையை இனிச் கூற முடியாது. சமீபத்தில், அவர்கள் தங்கள் தனி இடங்களிலிருந்து பொது ஜனங்களின் மத்தியில் வந்து நின்றதோடல்லாமல், "கிரிக்கெட்" விளையாடவும் செய்தனர். எல்லாம் க்ஷயரோக நிதிக்குப் பொருள் தேடிக் கொடுப்பதற்காக.

சூரிய வெளிச்சமே மேலே படாமல் வளர்ந்துவரும் இந்த நக்ஷத்திரங்கள் தங்கள் வெட்கத்தையும், பயத்தையும் மூட்டைகட்டி வைத்து விட்டு, மாறு வேஷங்களைப் போட்டுக் கொண்டு கூத்தடித்தது பற்றிச் சென்ற மாதம் விரிவாக எழுதியிருந்தேனல்லவா!

இந்த மாதம், சர்வதேச பிலிம் விழா இந்தியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்றது. வெளி நாட்டினர் இந்திய சினிமா உலகிற்கு மதிப்பளிக்கும் ரீதியில் ஏராளமாய் வந்து கலந்து கொண்டனர். நம் படப் பிரமுகர்களில் சிலர் மேனாட்டிற்குச் சென்று விட்டு வந்ததெல்லாம் அந்தக் காலம். இப்பொழுதோ மேனாட்டுப்பிரமுகர்கள் நம்மைத் தேடிவர ஆரம்பித்து விட்டனர். இனி நம் படங்கள் வெளி தேசங்களிலெல்லாம் ஜெயக்கொடி நாட்டும் நன்னாள் அதிக தூரத்தில் இல்லை என்று நான் நிச்சயமாய் கூறமுடியும்.

இப்படியாக நம் சினிமா உலகில் நம்ப முடியாத விஷயங்களெல்லாம் தொடர்ச்சியாக நிகழத் தொடங்கி யிருக்கும் போது இதைப் புரட்சி என்று சொல்லாமல் வேறென்ன சொல்வது!

இந்தப் புரட்சி நம் சினிமாத் தொழிலுக்கு நன்மையைப் போலவே தீமையையும் உண்டு பண்ணக் கூடும். முதலாவதாக, வெளி நாட்டுக் கதை, டெக்னிக் முதலியவற்றைக் காப்பியடிப்பதை நம் பட முதலாளிகள் நிறுத்த வேண்டும். இல்லையேல் நம் தொழில் பெற்றுள்ள மதிப்பு சீக்கிரமே மண்ணாகி விடும் என்பது திண்ணம்.

சர்வதேச பிலிம் விழா

சென்னையில் சிறப்பாக நடந்தேறியது

முதன் முதலாக இந்தியாவில் நடைபெற்ற 'சர்வ தேச பிலிம் விழா'வை சென்ற மாதம் 24-ம் தேதி பம்பாயில் விளம்பர-செய்தி இலாகா மந்திரி கனம் திவாகர் ஆரம்பித்து வைத்தார். இந்த விழாவில் சினிமாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பலரும, பொது மக்களும் கலந்து கொண்டனர். இந்த விழாவில் பல நாடுகள் கலந்து கொண்டன. செய்திப் படங்கள், வர்ணப் படங்கள், டாக்குமென்டரி படங்கள், இப்படியாக 115 படங்கள் பல தியேட்டர்களில் காட்டப்பட்டன. விழாவுக்கு நேருஜீ வாழ்த்து அனுப்பியிருந்தார்.

இந்த விழா சென்னையில் இம் மாதம் 9-ம் தேதி டி. சூர்ய குமாரியின் பிரார்த்தனை கீதத்துடன் ஆரம்பமாயிற்று. தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் அமைக்கப் பட்டிருந்த திறந்த வெளித் தியேட்டரில் தென்னிந்தியப் படத் தொழிலைச் சேர்ந்த பிரமுகர்களும், நக்ஷத்திரங்களும், டெக்னிஷ்யன்களும், பொதுமக்களும் திரளாக விஜயம் செய்திருந்தார்கள். நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த மேடைமீது பல தேசப் பிரதிநிதிகள் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. எல்லோரும் இந்தியாவுக்கு நல் வாழ்த்துக்கள் கூறி அதன் நல்லுறவை நாடினர். விழாக் கமிட்டியின் தலைவர் சி. எம். அகர்வாலா பிரதிநிதிகளையும் மற்றவர்களையும் வரவேற்றார். பிரதேசக் கமிட்டியின் சார்பில் வரவேற்றுப் பேசிய ஏ. ராமய்யா இந்த விழா தெ. இ. படத் தொழிலின் சரித்திரத்தில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் என்றார். விழாவை ஆரம்பித்து வைத்த பிரதம நீதிபதி பி. வி. ராஜமன்னார் அங்கு குழுமியிருந்த சினிமாக் கலைஞர்களின் சிந்தனையைத் தூண்டும் படியான ஒரு அரிய சொற்பொழி வாற்றினார்.

எஸ். எஸ். வாஸன் விழாப் படங்கள் காட்டப்பட்ட திறந்த வெளித் தியேட்டரை திறந்துவைத்துப் பேசினார். பிறகு, அந்தத் தியேட்டரில் ஸெஸில் டி மில்லி தயாரித்த "தி கிரேட்டஸ்ட் ஷோ ஆன் எர்த்" என்ற படம் காட்டப்பட்டது.

விழாப் பிரதிநிதிகளுக்கு தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் 9ந் தேதியன்று தென்னிந்திய சினிமாத் தொழிலினர் ஒரு வரவேற்பை அளித்தனர். இவ்விழாவுக்கு எஸ். எஸ். வாஸன் தலைமை வகித்தார். தென்னிந்திய பிலிம் வர்த்தக சபைத் தலைவர் ஏ. ராமய்யா அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் இந்திய பிலிம் தொழில் வளர்ந்து வருவதைக் குறிப்பிட்டார். டெக்னீஷ்யன்கள் சங்கத்தின் சார்பில் கே. ராம்னாத் நல்வரவு கூறினார். தென்னிந்திய சினிமா ஸ்டுடியோக்கள் சங்கத்தின் சார்பில் ஸ்ரீ. ஆர். எம். சேஷாத்திரி அயல்நாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றார்.

சீனப் பிரதிநிதிகள் சார்பில் இன்ஸீன் வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார். இந்தியா-சைனா மக்களுக்கிடையே நல்லுறவு வளரும் என்று தாம் நம்புவதாக அவர் கூறினார். அமெரிக்காவின் சார்பில் பிராங் காப்ரா பேசுகையில், சினிமாத் தொழிலில் பலவேறு தொழில் நுட்பக் கலைஞர்களின் ஒத்துழைப்புக் கூட்டு முயற்சியினால்தான் வளர முடியும் எனக் கூறினார்.

ஸோவியத் சார்பில் என். சேமினவ் பேசினார். ரஷ்யாவில் மக்களின் நல்வாழ்வுக்காக சீர்திருத்தங்கள் செய்யப்படுவதாகவும் சினிமாத் தொழில் அங்கு மிகவும் உன்னத நிலையில் முன்னேறியிருப்பதாகவும், இத்துறையில் இந்தியாவுக்கு வேண்டிய உதவி புரியத் தயார் என்றும், இயந்திர சாதனங்களையும் சினிமாத் தொழில் நுட்பக் கலைஞர்களையும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க ஸோவியத் நாடு தயாரென்றும் கூறினர். இந்தியா சம்பந்தமாக டாகுமென்டரி படம் ஒன்றைத் தயாரிக்க ரஷ்யா விரும்புவதாகவும் அவர் கூறினர்.

ரஷ்யப் பிரதிநிதிகளுக்கு 10-ந் தேதி மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில்

ஒரு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸோவியத் பிலிம் பிரதிநிதி உபசரணைக் கமிட்டியால் இது ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீ. என். எஸ். கிருஷ்ணன் தலைமை வகித்தார். ரஷ்யா, சீனு, ஸெக்கோஸ்லோவகியா, ஹங்கேரி, ஆகிய தேசங்களிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர். கே. சுப்பிரமணியம் பிரதிநிதிகளை ஜனங்களுக்கு அறிமுகப் படுத்திவைத்தார். பல சங்கங்களின் சார்பாக ஹரிந்திரநாத் சடோபாத்யாயா வரவேற்புப் பத்திரங்களைப் பிரதிநிதிகளுக்கு வாசித்தளித்தார். ஸோவியத் பிரதிநிதி ஸெமினுவ் பேசுகையில் ஸோவியத் யூனியனில் சினிமாக் கலையானது மனித வர்க்கத்தின் க்ஷேமத்திற்கும், சந்துஷ்டிக்கும் காரண பூதமாயிருந்து வருகிறதென்றும், அதேபோல் இந்த சர்வதேச பிலிம் விழாவானது இந்திய மக்களுக்கும் ரஷ்ய மக்களுக்கும் இடையே சிநேக பாவத்தைப் பெருக்கக் காரண பூதமா யிருக்குமென்று நம்புவதாயும் எடுத்துரைத்தார். கடைசியில் 'மெட்ராசுக்கு வணக்கம்' என்று தமிழில் கூறிவிட்டு அவர் பேசசை முடித்துக் கொண்டார். ரஷ்யப் பிரதிநிதி மாடம் மாரஸ்காயா 'எல்லோருக்கும் வணக்கம்' என்று பேச்சைத் துவக்கி, 'இந்தியப் பெண்கள் வாழ்க' என்பதுடன் முடித்துக் கொண்டார். என். எஸ். கிருஷ்ணனும் கடைசியில் பேசினுர்.

விழாப் பிரதிநிதிகளுக்கு 11-ம் தேதி வாஹினி ஸ்டுடியோவில், விஜயா புரொடக்ஷன்ஸ் லிமிடெட் நிர்வாகிகள் ஒரு விருந்து நடத்தினுர்கள். ஸ்டுடியோ மிக நன்ருக அலங்கரிக்கப்பட்டு, மத்தியிலுள்ள விசாலமான மைதானத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. படத் தொழில் பிரமுகர்களும், நடிகர்களும், தொழில் நிபுணர்களும் ஏராளமாக வந்திருந்தனர். வெளி நாட்டுப் பிரதிநிதிகள் ஒருவர் பின் ஒருவராக முன் வந்து தங்களைத் தாங்களே அறிமுகம் செய்துகொண்டனர்.

கே. வி. ரெட்டி, ஸ்ரீ. பி. என். ரெட்டி, பானுமதி, வரலக்ஷ்மி, பி. சாந்தகுமாரி, அஞ்சலிதேவி, டபிள்யூ. எஸ். பார்த்தசாரதி, சேஷாசலம் செட்டியார், ராமவர்ம தம்பிரான் முதலியவர்கள் விழாப் பிரதிநிதிகளுக்கு ரோஜா மாலைகள் அணிவித்தனர். விருந்திற்குப் பிறகு பரதநாட்டிய, கதக்களி கச்சேரிகள் நடைபெற்றன.

12-ம் தேதி மாலை ராஜாஜி ஹாலில் ஒரு வரவேற்புபசாரம் நடந்தது. சேவா சமாஜம். மயிலாபூர் லேடீஸ் கிளப், அகில இந்தியப் பெண்கள் சங்கம், சினிமா ரஸிகர்கள் சங்கம், ஆகியவற்றின் சார்பில் மேற்படி உபசாரம் அளிக்கப் பட்டது. வைபவத்திற்குத் தலைமை வகித்த தாரா செரியன் விழாப் பிரதிநிதிகளை வரவேற்ருர். எகிப்திய பிரதிநிதி, ரஷ்ய கோஷ்டியைச் சேர்ந்த ஸெமினேவ், மங்லோஸ்கி, இத்தாலிய பிரதிநிதி, ஆகியோர் ப்பசியபின் வந்தனோபசாரத்துடன் இவ்விழா முடிவுற்றது.

பிலிம் திருவிழாவை யொட்டி வந்திருந்த சிறந்த சர்வதேசப் படங்களைப் பொதுஜனங்கள் பார்ப்பதற்கு வசதியாய் விஸ்தாரமான திறந்த வெளித் தியேட்டரை அமைத்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்த தென்னிந்திய பிலிம் டெக்னீஷியன்கள் சங்கத்தின் சேவையைப் பாராட்டி உம்மிடி பங்காரு செட்டி அண்டு சன்ஸ் கம்பெனியார் அவர்களுக்கு ஒரு வெள்ளிக் கோப்பையை பரிசளித்துள்ளனர். தென்னிந்திய பிலிம் டெக்னீஷியன்கள் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டைரெக்டர் கே. ராம்னுத் பரிசை ஏற்றுக் கொண்டார்.

பொதுஜனங்கள் பார்ப்பதற்கெனவே பிலிம் விழாவின்போது பிரத்தியேக 'ஷூட்டிங்' நடத்தப் பட்டது. அதில் எம். எஸ். எஸ். பாக்கியமும், சுந்தரிபாயும் பங்கெடுத்துக் கொண்டனர்.

நடனம் ஆடினார்

"நந்தி"

தியாகப் பிரம்மகான சபையில் கடந்த மாதம் 20-ம் தேதியன்று ரமணி கோபால் கோஷ்டியாரின் நடனங்கள் நடைபெற்றன. சிறு நடன நாடகங்கள், பதங்கள் முதலியவை நிறைந்திருந்தன — அன்றைய நிகழ்ச்சியில். "ஏன் பள்ளி கொண்டீர் ஐயா" என்ற பதத்திற்கு கோபாலின் அபிநயத்தில் ஹஸ்தபேதங்கள் சுத்தமாக இருந்தன; சாத்விகம் போதாது. "மதுரா நகரிலோ" என்ற பாட்டில் இடி மின்னல் போன்ற காட்சிகளைப் புகுத்தியிருந்தது போற்றத் தக்கது. "பஞ்சாபி, ஜிப்ஸி", "இரு மனைவியும் புருஷனும்", போன்ற நடன நாடகக் கதைகளின் கற்பனை உயர்தரமாக இருந்தது எனச் சொல்வதற்கில்லை. "சிப் ஜோக்" என்று சொல்வார்களே அதுபோல இருந்தது கதைகள். அன்றைய நிகழ்ச்சியில் தாமோதரன் ஆடிய "மயில் நடனம்", "வேடன் நடனம்" ஆகிய இரண்டும் சுத்தமான கதக்களி அடவுகளுடன் விறுவிறுப்பாக இருந்தன.

"ஜதிஸ்வரம்", "நடனம் ஆடினார்" முதலியவற்றில் ஜதிகளை ரமணி ஆடும்போது 'ஓடுவதைப் போலவே இருக்கிறது', என்று ஒரு ரஸிகர் குறிப்பிட்டார். வேகமான அடவுகளை ஆடும்போது கால்கள் முன் பக்கமாகவே வளைந்திருந்ததால் ரஸிகருக்கு அம்மாதிரி தோன்றியிருக்கிறது. 'பெண்மையின் கவர்ச்சியையும், மென்மையையும் வலியுறுத்தும் உணர்ச்சி மிகுந்தது' என வர்ணிக்கப்படும் தில்லானாவை கோபால் ஆடினார்! பூரண வெற்றி பெறவில்லை. "நடனம் ஆடினார்" (சிவ பார்வதி) நடனத்தில் சில சமயங்களில் ரமணி ஆடிய போது கோபால் ஆடாமல் நின்றதும், கோபால் ஆடியபோது ரமணி ஆடாமல் நின்றதும் போன்று அமைந்திருந்த இடங்களில், இருவருக்கும் மாறிய அடவுகளை அமைத்துத் தொகுத்திருக்கலாம்.

நல்ல பயிற்சி பெற்ற நடன கோஷ்டி, வாத்ய கோஷ்டி முதலிய சௌகரியங்களை உடைய கோபால் ஏராளமான துக்கடா நடனங்களில் கவனத்தைச் செலவழிப்பதை விட, அடவுக் கோர்வையையும், அபிநயத் திறமையையும், வெளிப்படுத்தப் போதுமான ஒரு நல்ல நாட்டிய நாடகம், சில துக்கடா நடனங்கள், இவற்றைக் கொண்டு கச்சேரியை நடத்திப் பார்க்கலாம். அன்றையக் கச்சேரி டி. கே. மகாலிங்கம் பிள்ளையின் நட்டுவாங்கத்துடனும், கே. எஸ். லக்ஷ்மியின் இனிமையான பின்னணி கீதத்துடனும் சோபித்தது.

பைன் ஆர்ட்ஸ் ஸெண்டர் என்ற புது சபையினர், இம்மாதம் 6-ம் தேதியன்று சென்னை மியூஸியம் தியேட்டரில் ஆரம்ப விழாக் கொண்டாடினார்கள். அன்று குமாரி சாருபாலாவின் நடனக் கச்சேரி நடைபெற்றது. "சகியே இந்த வேளையில்" என்ற வர்ணத்தில் ஜதிக்கோப்புகளும், சொற்கட்டுகளைக் கையாண்ட பாணியும், அடவுகளை ஆடிய திறமையும் ஒன்றையொன்று போட்டியிடுவது போல் அழகாக அமைந்திருந்தன. "மதுரா நகரிலோ", "கனவு பலித்ததடீ" முதலிய பதங்களில் பத விந்யாசம்,

ஆர். சௌந்தரம்

(தொடர்ச்சி 68-ம் பக்கத்தில்)

எம்.எஸ். திரௌபதி

வாழ்க்கை வர்ணனை

"தேடுவோருக்கு அநேகமாகக் கிடைக்காது; ஆனால் அது எங்கோ உள்ள ஒருவரைத் தானாகத் தேடிச் சென்று ஆச்சரியப்படத் தக்க வகையில் அவரை ஒரேயடியாய் மாற்றி விடும்! இது என்ன!"

இந்த விடுகவிக்கு உங்களால் பதில் அளிக்க முடியுமா!

கதைகளில் நீங்கள் சில சம்பவங்களைப் படித்துவிட்டு, "அசல் வாழ்க்கையில் இதுமாதிரி நடக்குமா?" என்று கேட்டதுண்டு. ஆனால் சினிமா வானில் பிரகாசிக்கும் இன்றைய நக்ஷத்திரங்கள் சிலரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தவர்கள் இது போன்ற கதைச் சம்பவங்களை தாராளமாய் நம்புவார்கள். ஏனென்றால் எங்கோ இருந்த, ஏதோ செய்து வந்த எத்தனையோ பேர்களுக்கு நக்ஷத்திரப் புகழ் இப்படியாகத் தானே ஏற்பட்டிருக்கிறது!

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி நக்ஷத்திரப் புகழ், ஏங்கித் தவிப்பவர்களுக்கு வாய்க்காது. ஆனால் எதிர்பாராத சிலரிடம் எதிர்பாராத விதமாய் போய்ச் சேரும். இதற்கு உதாரணமாய் நீங்கள் முன்பே பல நக்ஷத்திரங்களின் வாழ்க்கை வர்ணனைகளைப் படித்திருக்கிறீர்கள். எம். எஸ். திரௌபதியின் வாழ்க்கையும் இதற்கு மற்றுமொரு சிறந்த உதாரணமாய் இருக்கிறது.

திருப்பூரை அடுத்த மேட்டுப்பாளையம் என்ற கிராமத்தைச் சொந்த ஊராகக் கொண்டவர் எம். எஸ். திரௌபதி. அந்தக் கிராமத்தில் பழனிச் சாமியார் என்று ஒருவர் இருக்கிறார். அவர் உண்மையில் சாமியாரல்ல. பழனிக்கு ஒரு முறை போய்விட்டு வந்தது முதல் அவர் தாடி வளர்க்க ஆரம்பித்து விட்டார். அது காரணமாக, அவரை அவ்வூரார் பழனிச் சாமியார் என்று அழைக்கத் தொடங்கி விட்டனர். அவரது உண்மைப் பெயர் சின்னசாமி செட்டியார் என்பது.

சின்னசாமி செட்டியார் கன்னட தேவாங்க செட்டியார் ஜாதியில், பிறந்த ஒரு ஏழை நெசவுத் தொழிலாளி. அவரது முன்னோர்களும் இதே தொழிலைத் தான் செய்து வந்தனர். ஒருநாள் அவர் தம் வேலையில் ஈடுபட்டிருக்கையில், 'பாவாடைப் பருவ'த்திலிருந்த அவரது பத்து வயதுப் பெண் குயிலினிய குரலில் உத்ஸாகமாய் பாடிக்கொண்டிருந்தாள். இப்படியிருக்கையில், யாரோ இருவருடைய

குண்டூசி

வாழ்க்கை

பில்ஹணா

திகம்பர சாமியார்

தலைகள் அந்த அறைக்குள் எட்டிப் பார்த்தன. சின்னசாமி செட்டியார் அவர்களை உள்ளே வரும்படி அன்புடன் அழைத்தார். மறுகணம் இருவர் உள்ளே வந்து கீழே விரிக்கப்பட்டிருந்த பாய் மீது உட்கார்ந்தனர். அவர்களின் உடைகளையும், சிங்கார அலங்காரத்தையும் பார்த்தவுடன், "உங்களைப் பார்த்தால் நாடக நடிகர்கள் மாதிரியிருக்கிறதே" என்று கேட்டார் செட்டியார். அதற்கு அவர்கள். "ஆம்; நாங்கள் திருப்பூரில் நாடகம் நடத்திவரும் டி. கே. எஸ். பிரதர்ஸில் நடிகர்களாயிருக்கிறோம்" என்று பதில் அளித்தனர்.

பிறகு அவர்கள் தம்மைத் தேடி வந்த காரணத்தை விசாரித்தார் செட்டியார். வந்தவர்கள் ஒருவர் முகத்தை மற்றவர் கேள்விக் குறியுடன் பார்த்துக் கொண்டனர். சில விநாடிகளுக்குப் பிறகு அவர்களில் மூத்தவராயிருந்தவர் தைரியத்தை வரவழைத்துக் கொண்டவர் போல்பேச்சை ஆரம்பித்தார்:

"நாங்கள் இருவரும் பொழுது போக்காக, உலவி வருவதற்காக இந்தப் பக்கமாய் வந்தோம். இந்த வீட்டிலிருந்து நாங்கள் கேட்ட இனிய குரல் எங்களை காந்தம்போல் இங்கு இழுத்து வந்து

திகம்பர சாமியார்

''எல்லாப் பெண்களுடனும் சேர்ந்து டாட்டுப் படிக்கிறது திரௌபதிக்கு (இதுதான் அந்தப் பெண்ணின் பெயர்) கஷ்டமாயிருந்தது. திரௌபதி எதையும் ஒரு தடவை சொல்லிக் கொடுத்தால் அடடடியே பாடிவிடும். மற்ற பெண்களோ அப்படியில்லை. அவுங்க கத்துக்கற வரையிலே இது காத்துக்கட்டிருக்கணும், அதனாலே, தனி வாத்தியார் வைத்துப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கணும்னு இது என்னை சதா நச்

அந்தமான் கைதி

விட்டது. இப்பொழுது இங்கு பாடிக்கொண்டிருந்தது இந்தப் பெண்தானே!'' என்று பக்கத்தில் நின்ற பெண்ணைச் சுட்டிக் காட்டிக் கேட்டார். அவர் வாய் மூடுவதற்குள் மற்ற நடிகர், ''அடடா, என்ன இனிமையான குரல்! குயில் கூட வெட்கப்பட வேண்டும், என்னவோ வெறுமனே புகழ்வதாக நினைக்க வேண்டாம். நிஜமாகவே சொல்கிறோம். இந்தப் பெண் உங்கள் மகள்தானே!'' என்று கேட்டார். சாமியார் பூரித்துப் போனார். ஆச்சரியமென்ன! தம் குழந்தைகளைப் பிறர் பாராட்டும்போது பூரிப்படையாத பெற்றோர்கள் உண்டோ! பெரியவர் தம் மகளைப் பற்றி விரிவாகவே கூறத் தொடங்கினர்: ''இது என்னுடைய மகள்தானுங்க, எங்கள் பரம்பரையில் யாருக்குமே ஆட்டம், பாட்டு இவைகளில் பழக்கம் கிடையாது. ஆனால் இந்தக் குழந்தை மட்டும் இரண்டு வயசு முதல் தானாகவே பாட ஆரம்பிச்சுட்டுதுங்க. அப்புறம் பள்ளிக்கூடத்தில் சேர்த்தினதும், அவங்க நடத்திவந்த பாட்டுக் கிளாஸில் சேர்ந்துக்கிட்டு பாட்டுப் படிக்க ஆரம்பிச்சுதுங்க.

வாழ்க்கை

சுறிக்க ஆரம்பிச்சுட்டுதுங்க. சீமைத் துணிப் போட்டியினுலே எங்கள் தொழில் அடியோடு விழுந்துட்டுதுங்க. அன்ருட ஜீவனத்திற்கே எங்கள் வருமானம் போதவில்லை. அப்படி யிருக்கிறபோது பாட்டு வாத்தியார் எப்படி வைக்கிறதுங்க. இருந்தாலும் குழந்தையின் கெஞ்சலைக் கேட்டுக்கிட்டு சும்மா இருக்க முடியல்லை. நம்ம ஊரிலே குப்புசாமி பாகவதர் என்பவரிடம் பாட்டு கத்துக்க ஏற்பாடு செய்திருக்கிருேம். இந்த வாத்தியாருக்கு நாங்கள் சொற்பச் சம்பளம்தான் கொடுக்கிருேம் என்ருலும், அவர் குழந்தைக்கு ரொம்ப அக்கரைபோடு சொல்லிக் கொடுக்கிருருங்க" —என்று கூறி முடித்தார் பழனிச் சாமியார்.

இவைகளைக் கேட்டதும் நடிகர்கள் இருவரும் திரௌபதியின் பக்கம் திரும்பினர். அவர்களில் ஒருவர், "இப்பொழுது எது வரையில் சொல்லிக் கொடுத்திருக்கிருர்!" என்று அக்கரையுடன் கேட்டார்.

திரௌபதி கணீரென்ற குரலில், "எட்டு வர்ணம், பனிரண்டு கீர்த்தனை முடிந்து விட்டது" என்று வெடுக்கென்று பதிலளித்தார். நடிகரின் முகம் மலர்ந்தது. ஒன்றிரண்டு நிமிஷங்கள் ஒன்றுமே கூருது அவர் திரௌபதியின் முகத்தையே கூர்ந்து கவனித்தபடி யிருந்தார்.

அந்த இரண்டு நிமிஷ நேரம் மேற்படி நடிகர் செயலற்று இருந்தாரே தவிர அவரது மனதில் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. "இந்தப் பெண்ணிடம் நல்ல முகவெட்டு, இனிய பாட்டு, சுத்தமான பேச்சு எல்லாம் ஒருங்கே பொருந்தி யிருக்கின்றன.

(தொடர்ச்சி 64-ம் பக்கத்தில் பார்க்க)

பொது இன்பங்கள்

நம் நாட்டில் நடுத்தரக் குடும்பத்தாருக்கு ஓய்வு நோத்தில் முக்கியமான மகிழ்ச்சிகரமான பொழுதுப் போக்கு ஸினிமாதான். ஸினிமா குடும்பத்தில் எல்லோராலும் சக்திக்குத்தகுந்த செலவில் ரஸிக்கக் கூடினது.

இன்னும், எல்லோராலும் ஓய்வு நேரங்களில் குறைந்த செலவில், ரஸித்து, மகிழ்ந்து அனுபவிக்கக் கூடினது ஒன்று உண்டு. அதுதான் ஒரு கப் சூடான 'டீ'. அது உற்சாகத்தையும் புத்துயிரையும் கொடுக்கிறது.

டீ

உங்களுக்கு அதிக
இன்பத்தை கொடுக்கிறது.

சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.

நுனிப்புல்

வெட்டுக்கிளி

சினிமா உலகிலுள்ள யார் யாரையோ பற்றியெல்லாம் நான் எழுதிவிட்டேன். ஆனால், முக்கியமான ஒரு நபரை மறந்துவிட்ட குறை எனக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. அவர்தான்—என் சகோதரர்—ஸ்ரீமான் எழுத்தாளர். அதாவது பட உலகில் கதை-வசன-சாஹித்ய கர்த்தாக்களாக இருப்பவர்கள். நம் படவுலகில் தங்களை வசனகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். இவர்களை மூன்று ரகங்களாகப் பிரிக்கலாம். பல படங்களுக்கு வசனம் எழுதி பிரபலமாக இருப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் ஒன்றிரண்டு பேர்கள். அடுத்தது சில படங்களுக்கு மட்டும் வசனம் எழுதி அதிகமாகப் பிராபல்யம் அடையாமல் இருக்கிறவர்கள். இவர்களின் எண்ணிக்கை கொஞ்சம் அதிகம்தான். மூன்றுவது ரகம்; எண்ணி, ஒன்றிரண்டு படங்களுக்கு மட்டுமே வசனம் எழுதிவிட்டு மேற்கொண்டு சந்தர்ப்பத்தை நாடி அலையும் பிரகிருதிகள். இந்த ரகத்தில் தான் அதிகம்பேர் இருக்கிறார்கள். இந்த மூன்று ரகத்தாருமே தாங்கள் "பிரமாதமாக வசனம் எழுதுவதாக"த்தான் சொல்லிக்கொள்கிறார்கள் !

• • •

இந்த மூன்று ரகத்திலுமே ஒட்டாமல் இருப்பவர்கள் ஒரு தனி 'ஜாதி'. இப்படிப்பட்டவர்கள்—'அரைக் கிணறு தாண்டி'யவர்கள். அதாவது, அரைப் படம், கால்படம், அரைக்கால் படம் இப்படி வசனம் எழுதியிருப்பவர்கள். விபரமாகச் சொல்லுகிறேன். ஒரு படத்திற்கு வசனம் எழுத ஒப்பந்தமாகி சில பகுதிகளுக்கு இவர்கள் வசனம் எழுதியிருப்பார்கள். அதற்குள், இவர்களை நீக்கிவிட்டு சம்பந்தப்பட்டவர்கள் வேறு யாரையாவது அந்த வேலைக்குப் போட்டுக் கொண்டு விடுவார்கள். இந்த ரகத்தவர்கள்தான் அனைவரிலுமே மிகவும் துரதிருஷ்டம் பிடித்தவர்கள். படம் வெளிவரும்போது இவர்கள் வசனம் எழுதியதற்கு இவர்களுக்குப் 'பெயரளவில்கூட' பலன் கிடைக்காது.

• • •

ஒரு படம் தயாராகி வெளி வருவதற்குள் அதன் டைரெக்டர் யார் என்பது பற்றியோ, அதில் நடிப்பவர்கள் இன்னின்னார் என்பது பற்றியோ இந்த நாட்களில் எப்படி நிச்சயமாகக் கூறிவிட முடியாதபடி இருக்கிறதோ, அதுபோலத்தான் வசன கர்த்தாக்கள் விஷயமும். படம் அறிவிக்கப்படும் போது அதன் வசனகர்த்தா ஒருவராக இருப்பார்; அது தயாராகி வரும்போது வேறு பலர் அந்த வேலையில் முனைவார்கள். படம் தயாராகி திரையிடப்படும் பொழுதோ முற்றிலும் வேரான ஒருவர் "வசனகர்த்தா" என்ற பெருமையை அடைந்திருப்பார். இப்படிப்பட்ட ஒரு தமாஷை சமீப காலத்தில் வெளிவந்த பல படங்களில் காணமுடிந்ததை நேயர்கள் கவனித்திருக்கலாம் !

• • •

சமீபத்தில் ஒரு பிரபல வசனகர்த்தாவின் உதவியாளர் ஒருவரை நான் சந்திக்க நேர்ந்தது. அவர் தம் சட்டைப் பையில், பஞ்ச வர்ணங்களில். அரை டஜன் பவுண்டன் பேனாக்களை மாட்டிக் கொண்டிருந்தார். "என்னய்யா, பேனா வியாபாரததில் இறங்கிவிட்டீரா!" என்று கேட்டேன். "இந்த வேலையை விட அந்த வியாபாரம் எவ்வளவோ மேல்தான். ஆனால். இந்த ரகசியம் வேறு" என்று விஷயத்தை விளக்கினார். அதாவது அவருடைய தலைவர்—அந்த வசனகர்த்தா—எழுதிக்கொண்டே இருக்கும்போது சட்டென்று பேனாவில் மை ஆகிவிட்டால்,

வேறு ஒரு பேனா உடனே கொடுக்கப்பட வேண்டுமாம். இல்லாவிட்டால், பேனாவுக்கு மை போடுவதற்காகக் கொஞ்ச நேரம் தாமதமானாலும் "மூட்" (Mood) போய்விடுமாம். சமீபத்தில் ஒரு டைரெக்டரை நான் சந்தித்தபோது அவர் இந்தப் பேனாக்கள் விஷயமாகக் கொடுத்த வியாக்கியானம் ரொம்பவும் தமாஷாயிருந்தது. அந்த டைரெக்டர் டைரெக்ட் செய்துவரும் ஒரு படத்திற்கு இப்பொழுது இந்தக் குறிப்பிட்ட நபர் கதை வசனம் எழுதி வருகிறார். "அந்த வசனகர்த்தா எதற்காக ஏமெட்டு பேனாக்கள் வைத்திருக்கிறார் தெரியுமா? ஒன்று சோகரஸக் கட்டங்களுக்கு வசனம் எழுத, ஒன்று ஹாஸ்ய கட்டங்களில் வசனம் எழுத, மற்றொன்று காதல் கட்டங்களில்" என்று டைரெக்டர் அடுக்கிக் கொண்டே போனபோது நான் இடைமறித்து "ஒன்று 'செக்'குகளில் கையெழுத்துப் போடுவதற்குப் போலும்" என்றேன்.

• • •

சாதாரணமாக எங்க எழுத்தாளரைக் கேட்டாலும் இந்த 'மூட்' (Mood) விஷயம் அடிபடும். "மூட்" வந்து விட்டால் எழுதிக் கள்ளி விடுவேன் ஸார்" என்று சொல்லுவார்கள். இந்த 'மூட்', பட வசனகர்த்தாக்களுக்கு சாதாரணமாக சுலபத்தில் வரவே வராது. இந்த இடத்தில் சில வசனகர்த்தாக்களுக்கு 'மூட்' ஏற்பட, அவர்கள் கையாண்ட, கையாளும் முறைகளையும் குறிப்பிட விரும்புகிறேன். சில படத் தயாரிப்பாளர்கள் வசனகர்த்தாக்களுக்கு ஒழுங்காகப் பணம் கொடுத்திருக்க மாட்டார்கள். அவர், 'வசனம் தயாராகி விட்டதா? ஸெட் போடலாமா?' என்று கேட்கும்போது, வசனகர்த்தா தமக்கு 'மூட்' வரவில்லை என்று அந்த 'மூட்' மேலேதான் பழி போடுவார். ஆனால், உண்மை ரகசியம் தெரிந்தோ. தெரியாமலோ தயாரிப்பாளரிடமிருந்து வசனகர்த்தாவின் கைக்குக் கொஞ்சம் பணம்போனால் உடனே அந்த 'மூட்' வந்துவிடும்.

• • •

இன்னொரு வசனகர்த்தா விஷயம் ரொம்ப விசித்திரமானது. இவர் ஒரு படத்திற்கு வசனம் எழுதி முடிப்ப

தையே ஒரு தனிப் படமாகத் தயாரித்தாலும் கூட ரஸமாக இருக்கும். இவர் மதுப் பிரியர்: 'மதுவிலக்கு' இல்லாத அந்தக் காலத்தில், இவரிடம் வசனம் எழுதி வாங்க பட முதலாளிகள் கையாண்ட முறையைச் சொல்லுகிறேன். இவருக்கு 'மூட்' வர அவர்கள் கையாளும் முறை அது. வசனம் எழுதி வாங்க வேண்டிய கட்டம் வரும்போது, 'சகல வசதி'களுடன் கூடிய ஒரு விசாலமான தனி அறையில் இவரையும் இவரது உதவியாளரையும் தள்ளி வெளியே பூட்டிக் கொண்டு விடுவார்கள். (வசனகர்த்தாவின் சம்மதத்துடன் தான்!) அறையின் உள்ளே அவருக்கு வேண்டிய மதுவகைகள் குறைவின்றி இருக்கும். ஒரு நாள் பொறுத்துக் கதவைத் திறப்பார்கள். வசனம் எழுதப்பட்டு தயாராயிருக்கும்.

எவி. எம். மின் ' பஹார்'' ஹிந்திப் படத்தில் காட்சியளிக்கும் பிரபல நடிகர் கரன் திவான சென்னைக்கு வந்து கிரிக்கெட் ஆடினர்.

• • •

இந்தப் பிரபல வசன கர்த்தாவின் வசனங்கள் அப்பொழுதெல்லாம்—மதுவிலக்கு அமலுக்கு வரும் முன்—சிறப்பாக இருந்தன. இப்பொழுதெல்லாம் அவ்வளவு எடுப்பாக இருப்பதில்லை. இதற்கு உண்மைக் காரணம் வேருக இருந்தாலும். அந்த வசனகர்த்தா என்னவோ தமக்கு 'மூட்' வருவதில்லை என்றும், அது ஏற்படக் காரணமாக இருந்த அந்த மதுவையுமே காரணங்களாகக் கூறுகிருர். இந்த மாதிரி 'மது'வையே தமது 'மூடு'க்குப் பொறுப்பாளியாகக் கூறும் ஒரு சாஹித்ய கர்த்தாவும் நம் தமிழ்ப் படவுலகில் இருக்கிருர்.

• • •

இந்த 'மூட்' ஏற்பட ஒரு சில வசன கர்த்தாக்கள் இடம் மாறுகிருர்கள். குற்ருலத்திற்காவது உதகமண்டலத்திற்காவது போய் 'காம்ப்' போடுகிருர்கள். குளிர்ந்த இடத்திற்குப் போனுலாவது நல்ல சரக்குக் கிடைக்குமென்ற ஆவலில் செலவைப் பொருட்படுத்தாது படத் தயாரிப்பாளரும் தம் செலவில் அவர்களை இஷ்டம் போல் அனுப்பி வைப்பார். ஆனல், பணத்தையும் செலவு செய்து விட்டு, தகுந்த பலனும் கிடைக்காமல் போகும்போது, பாவம், அந்த முதலாளியின் மனம் என்ன பாடு படும். பலர் இப்படி ஏமாற்றும் வசன கர்த்தாக்களாகத் தானிருக்கிருர்கள்!

• •

'உழைப்பவன் ஒருவன்; அதன் பலனை, புகழை அடைபவன் இன்னொருவன்' என்பது வெளி உலகில் மட்டுமல்ல; அதைவிட அதிகமாக சினிமா உலகில் இடம் பெற்றிருக்கிறது. புதிதாக எழுத்தாளர் ஒருவர் படத்துறையில் பிரவேசிப்பார். ஒரு படத்துக்காக வெகு அழகாக வசனங்கள் எழுதுவார். ஆனல், அப்புறம் நடப்பது என்ன! பட விளம்பரங்களில் 'வசனம் எழுதியது' என்று அவர் பெயரை அறிவிக்கமாட்டார்கள். அதற்குப் பதில் புகழ்பெற்றுவிட்ட ஒரு பழைய வசனகர்த்தாவின் பெயர் இருக்கும். புதிய வசனகர்த்தாவும் நடவடிக்கை எடுக்க முடியாது முழிப்பார். காரணம், படத் தயாரிப்பாளர்கள் அவரிடம் அந்த முறையில்தான்.—அவரை அதற்குச் சம்மதப்பட வைத்து—எழுதி வாங்கி இருப்பார்கள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா! தயாரிப்பாளர்கள், முதலில் அந்தப் பிரபலமான பழைய வசன கர்த்தாவை ஒப்பந்தம் செய்து விளம்பரம் செய்து விடுவார்கள். ஆனல் அவர் ஒழுங்காக வசனம் எழுதித் தரமாட்டார். அதற்காக முதலாளி படத் தயாரிப்பை நிறுத்திவிட முடி

புதிய 1952

வாக்ஸால் கார்கள்

உள்ளும் புறமும் முற்றிலும்
நவீனமாக அமைக்கப்பட்டவை.

ஆறு ஸிலிண்டர் வெலாக்ஸ் • நான்கு ஸிலிண்டர் வைவர்ன்

சுந்தரம் மோட்டார்ஸ்
லிமிடெட்.,

மவுண்ட் ரோடு,

சென்னை.

டி. வி. சுந்தரம் அய்யங்கார்
& ஸன்ஸ் லிமிடெட்.,

மதுரை, திருச்சிராப்பள்ளி,
திருநெல்வேலி, புதுக்கோட்டை
& சேலம்.

யுமா? ஒரு புதிய ஆசாமியைப் போட்டு வேலையை முடித்து விடுவார்கள்.

• • •

பட உலகில் வசனகர்த்தாவாகக் கால் வைத்து, இன்று டைரெக்டராகவும் ஆகிவிட்ட ஒரு எழுத்தாளரின் 'லீலைகளை' இங்கு குறிப்பிடாவிட்டால் இந்தப் பகுதி பூர்த்தி பெற்றதாகாது. ஸிலோன் வாசியாக இருந்த இவர் ஒரு ரேடியோ நாடகத்தின் மூலம் பட உலகில் அறிமுகம் ஆனார். ஆனால், அந்த நாடக வசனங்களே இவருடைய சொந்தமில்லை என்பதை அந்தக் காலத்தில் வெட்ட வெளிச்சமாக்கி வைத்தார், காலஞ்சென்ற ஒரு எழுத்தாளர். இவருடைய இலக்கியத் திருட்டை அவர் 'இரவல் விசிறி மடிப்பு' என்று தலைப்புப் போட்டு ஒரு தினசரி மூலம் அம்பலப் படுத்தியிருந்தார். ஆனாலும் அவரது அதிருஷ்டத்தைத் தடைசெய்ய முடியவில்லை. அடுத்து அடுத்து அவருக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்து வந்தன. சீக்கிரமே ஒரு பிரபல படத் தயாரிப்புக் கம்பெனியின் அபிமானத்தை சம்பாதித்துக் கொண்டு அங்கு ஸ்திரமாகி விட்டார்.

• • •

அந்தக் கம்பெனியில் இருந்துகொண்டு அவர் செய்த அட்டகாசம் கொஞ்சமா, நஞ்சமா! எவ்வளவோ எழுத்தாளர்களைப் பாடாகப் படுத்தி வைத்தார். வசனம் எழுதுகிறேன் என்று வந்தவர்களை யெல்லாம் அவர் தமது வேலைக்கு உபயோகித்துக் கொண்டார். அவர்கள் எழுதிய வசனங்களை யெல்லாம் தாம் எழுதியதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டார். அப்படியே விளம்பரங்களிலும் போட்டுக் கொண்டார். இன்று அவர் வசனம் எழுதியதாக வெளிவந்துள்ள பல படங்களின் வசனங்களை உண்மையில் வெவ்வேறு ஆசாமிகள் எழுதியிருக்கின்றனர். பாவம், அந்த எழுத்தாளர்கள், அந்தக் காலத்தில் வறுமையின் காரணமாக தங்களுக்குப் பெயர் வராவிட்டாலும் பணம் வந்தால் போதும் என்ற நிலையில் இருந்தமையால் இவருடைய இந்தத் தில்லுமுல்லுகளுக்கு ஒப்புக் கொண்டார்கள்.

• • •

தமிழ் நாட்டை, சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் ஒட்டக்கூத்தன் என்ற ஒரு புலவர் இருந்தாராம். அவர் வேறு எந்தப் புலவரும் ராஜ சபையில் காலடி வைத்துவிடக் கூடாது என்று பல உபாயங்களைக் கையாண்டு வந்தாராம். அதேபோல இந்த வசனகர்த்தாவும் தாம் இருந்த ஸ்தாபனத்தில் ஒரு ஒட்டக்கூத்தனாக இருந்து யாரும் நெருங்கி விடாதபடி பார்த்துக் கொண்டார். ஆனால், ஒட்டக்கூத்தனை அடக்கவும் ஒரு புலவர் வந்ததுபோல இந்த 'ஆசாமி'யை அங்கிருந்து கிளப்ப யார் வந்தார்களோ தெரியவில்லை. அட்டையாக ஒட்டிக் கொண்டிருந்த அந்த ஆசாமி அந்த ஸ்தாபனத்தில் இல்லை. இந்தச் செய்தி பல வசனகர்த்தாக்களுக்கு மகிழ்ச்சி அளித்திருக்கிறது!

• • •

இந்த மாதிரி, ஒட்டக்கூத்தன்களைப் போல் படே படே படத் தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரிடமும் ஒருவர் இருப்பார் போலும். சென்னை பிரபல ஸ்டுடியோ ஒன்றில்கூட ஒரு ஒட்டக்கூத்தன் இருக்கிறார். அவர் எந்தப் புதிய எழுத்தாளருமே தம் எசமானரை நெருங்க விடுவதில்லையாம். அப்படியே தப்பித் தவறி யாராவது நெருங்கி வந்து விட்டாலும் அவருக்கு வத்தி வைத்து விடுவது தான் இவர் முதல் வேலை. இதற்கெல்லாம் காரணம் என்ன தெரியுமா? பயம் தான்! வருகிறவன் எங்கே புத்திசாலியாக இருந்து, உண்மையில் விஷயஞானம் உள்ளவனாக இருந்து, அதனால் தமது குட்டு வெளிப்பட்டு, தமது எசமானரின் அபிமானம் அவரிடம் மாறித் தம் கதி அதோகதி யாகிவிடுமோ என்ற பயம்தான்!

நேயர்களுக்கு!

சினிமா சம்பந்தமான ஹாஸ்யத் துணுக்குகள் சிறுகதைகள் வரவேற்கப் படுகின்றன. சன்மானம் உண்டு.

—ஆசிரியர்.

"அம்மா"வில் உணர்ச்சிமிக்க வசனங்கள்

புராதன டெக்னிக்கும், பொழுதுபோக்கு அம்சங்களும் தினசரி நிகழ்ச்சிகளும் நிறைந்த படம்

விதவையான லக்ஷ்மி மிகவும் சிரமப்பட்டு தன் மகன் வேணுவையும், மகள் சாரதாவையும் காப்பாற்றுகிறாள். வேணு காலேஜ் மாணவியான ராதாவைக் காதலிப்பதை அறிந்து, தன் மகன் சுகமே பெரிதெனக் கருதி ராதையின் தந்தையிடம் போய் பெண் கேட்டு அவமான மடைகிறாள். ராதை ஒரே பிடிவாதமாக வேணுவையே மணப்பேன் என்று வீட்டை விட்டு வெளிப்பட்டு அவனை மணந்து கொள்கிறாள். வேணு உத்தியோகம் கிடைத்து, தன் மனைவியுடன் கிராமத்தை விட்டு சென்னை வருகிறான். ராதையின் டாம்பீக வாழ்வினால், அவனால் தாயாருக்குப் பணம் அனுப்ப இயலவில்லை. கிராமத்திலே கடன்காரர்களிடம் சொத்துக்களை ஒப்படைத்து விட்டு சென்னை வருகின்றனர், தாயும் மகளும். ராதையினால் அவமதிக்கப்பட்டு வெளியேறுகின்றனர். ராதை தன் கடன்களை அடைக்க தன் கணவன் கொண்டு வைத்த பாங்கியின் பணத்தைக் கையாட, வேணு குற்றவாளியாகிறான். அவனைத் தப்புவிக்க அவன் தாய் பெரும் தொகையைத் திருடி அவனைக் காப்பாற்றி மடிகிறாள்.

'அம்மா'வின் அன்பு எத்தகையது; அவள் பொறுப்பு எவ்வளவு மகத்தானது, என்பவைகளை விளக்குவது போல் அமைக்கப் பட்டுள்ளது "அம்மா"வின் கதை. கதையின் பிரதான நோக்கம் உயர்வானதுதான். ஆனால் கதையின் போக்கில் அங்கங்கே பொத்தல்கள் இருக்கின்றன. இறுதியில் "அம்மா"வின் தியாகத்தை, கதையின் பாங்கர், டாக்டர் போன்ற மற்ற கதா பாத்திரங்கள் உணர்ந்து கொள்வதாக முடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இந்தப் படத்திலேயே சிறந்த அம்சம் படத்தின் வசனங்கள் தாம். உணர்ச்சியுடனும், கருத்துடனும் அவைகளை எழுதியிருக்கிறார் "சாண்டில்யன்'. முக்கியமாக "அம்மா"வின் பெருமைகளைப் பற்றி வேணுவுக்கு நண்பன் எடுத்துக் கூறும் கட்டத்திலும், டாக்டருக்கும் அவர் மகளுக்கும் பிற்பகுதியில் நடக்கும் விவாதத்திலும் உள்ள வசனங்களும் பாராட்டப்பட வேண்டியவை.

'வாசவதத்தா' நடன நாடகத்தில் வரும் பாட்டில், குந்தலவராளி ராகத்தில் பாடப்படும் அடிகள் ரொம்பவும் குளுமையாக இருக்கின்றன. பிக்னிக் சமயத்தில் பாடப்படும் பாட்டும் ரஸிக்கும்படி இருக்கிறது. பின்னணி வாத்தியங்களைப் பற்றி உயர்வாகக் குறிப்பிட எதுவும் இல்லை.

அம்மாவாக சாந்தகுமாரி நடிக்கிறார். வேஷப் பொருத்தம் சிறப்பாக இருக்கிறது. பல முக்கிய கட்டங்களில் இவர் நடிப்பு சப்பென்றிருக்கிறது. ராதையாக நடிக்கும் லலிதா முற்பகுதியை விட பிற்பகுதியில் நன்றாக நடித்திருக்கிறார். அவர் ஸைக்கிள் விடுவது இப் படத்தில் ஒரு புதுமை. குறும்புக்காரத் தங்கையாக பி. எஸ். சரோஜா நன்றாக நடித்திருக்கிறார்; ஆனால், காதல் கட்டம் என்று வரும்போது தான் பொறுமையை சோதிப்பதாக இருக்கிறது அவர்

அம்மா

தயாரிப்பு : அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸ்

நடிகர்கள் : திக்குறிச்சி, எம். என். நம்பியார், டி. எஸ். துரைராஜ், கே. ராமசாமி, டி. பாலசுப்பிரமண்யம், லலிதா, பி. எஸ். சரோஜா, சாந்தகுமாரி.

டைரெக்ஷன் : கே. வேம்பு.

தோற்றமும் நடிப்பும். சியாமளாவாக வும், நானியாகவும் நடிப்பவர்களின் நடிப்பு குற்றமற்ற முறையில் இருக்கிறது.

இக்குறிச்சி, கதாநாயகன் வேணுவாக நடிக்கிருர். அவரது நடிப்பைப் பற்றி அவ்வளவு உயர்வாகக் கூற முடியாது. பிற்பகுதியில் தனது மனைவியிடம் கோபமாகப் பேசும் கட்டங்களில் இவரது நடிப்பு நன்ருக இருக்கிறது. ஆனல், இவர் சம்பாஷணைகளை உச்சரிப்பதைத் தான் சகிக்க முடியவில்லை. முழுக்க முழுக்க மலையாள வாசனை வீசுகிறது. இதற்காகவேதான் போலும் நடுவில் ஒரு இடத்தில் 'சொந்த ஊர் கல்பாத்தி' என்று ஒரு வசனம் இருப்பது! டி. பாலசுப்ரமண்யம் டாக்டராக வழக்கம் போல மிடுக்காக நடித்திருக்கிருர். சாரதாவின் காதலனுக வரும் நம்பியாரின் நடிப்பு பாதகமில்லை. ஆனல், அவருடைய காதல் பார்வை கூட வில்லன் பார்வையாக இருப்பதுதான் ரஸிக்கும்படியாக இல்லை.

உண்மை ஊழியன் கேசவனுக நடிக்கும் துரைராஜுக்கு அதிக சந்தர்ப்பங்கள் இல்லை. கொடுத்த வரையில் கச்சிதமாக நடித்திருக்கிருர். நண்பனுக வரும் ராமசாமி தாம் ஒரு உயர்ந்த ஹாஸ்ய நடிகர் என்பதை இப் படத்தில் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தி யிருக்கிருர்.

ஒலிப் பதிவு பல இடங்களில் சுத்தமாக இல்லை. ஒளிப் பதிவு சிறப்பாக இருக்கிறது. பிக்னிக் காட்சிகள், இயற்கைக் காட்சிகள் யாவும் நன்ருகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்றிரண்டு காக்ஷி ஜோடனைகள் அபாரமாக இருக்கின்றன. 'வாஸவதத்தா' நடன நாடகத்திற்கெனப் போடப் பட்டிருந்த 'ஸெட்' குறிப்பிடத்தக்கது.

டைரெக்ஷனைப் பற்றிப் பிரமாதமாகக் குறிப்பிட எதுவுமில்லை. விறுவிறுப்பாக இருக்க வேண்டிய பல இடங்கள் மெள்ள நகர்கின்றன. ராதையிடமிருந்து நோட்டுகள் பறப்பது போல் காட்டியிருப்பதும், தந்தை வேண்டுமா, காதலன் வேண்டுமா என்று ராதையின் மனத்துள் போராட்டம் ஏற்படும் போது அந்த இருவரின் முகத்தையும் மாறி மாறிக் காட்டுவதும் சிறப்பாக இருக்கின்றன. ஆனல் ஒரே 'டெக்னிக்'கை ஒரே படத்தில் மீண்டும் மீண்டும் கையாளுவது சுகமில்லை. ராதை தன் தந்தையை விட்டு வெளிப்படும் சமயம், வேணு மனைவியை அழைத்துக் கொண்டு சென்னைக்குப் புறப்படும் சமயம், தாயும் மகளும் வீடு வாசலை இழக்கும் சமயம், இப்படி எல்லாக் கட்டங்களிலும் பின்னணிப் பாட்டைப் போட்டு அலுக்கடித்திருக்கிருர்கள். முதலில் வீடு ஸீல் வைக்கும் போது தாழ்ப்பாள் கதவின் நடுவிலும், வேணு வந்து பார்க்கும் போது மேலேயும் இருப்பது ஒரு பெரும் குறை. இறுதியில் மயானத்தில் வேணுவின் பூணூல் (பிராஜீவிதமாக) இடமாக இருந்திருக்கவேண்டும். இந்தப் படத்திலேயே பொறுமையைச் சோதித்து வேதனை உண்டாக்கும் கட்டம் மயானக் காட்சிதான். இது அநாவசியமாக வளர்த்தப் பட்டிருக்கிறது.

பல கட்டங்கள் சப்பென்றிருந்தாலும், உணர்ச்சியான வசனங்களுடன் கூடிய தாயின் பெருமையை விளக்கும் கதை அமைந்த ஆபாசமற்ற பார்க்க வேண்டிய படம்தான் "அம்மா"

"ஜாம்பவான்"

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு,
பி. டி. சென்னை.
கிளை: 82 காட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
89 பாண்டி பஜார், தி. நகர், சென்னை—17.

"Theatre chairs with Dunlopillo cushions and arm rests provide the maximum of seating comfort, and at the same time the highest acoustic absorption yet reached

on its way . . . Latex foam cinema seating

in theatre seats"—Ideal Kinema. Dunlopillo cinema seating is most economical. It has no springs or separate pieces and therefore needs no repairs. Being self-ventilating with millions of cells, it is COOL. It repels bugs. What could be more suitable for a climate such as ours?



DUNLOP

FOUNDERS
OF THE
LATEX FOAM INDUSTRY

DUNLOPILLO

MADE IN INDIA

DPX 11

28 ஆண்டுகளாக இந்தியாவில் சிறந்து விளங்கும்

வினாயகர்

V. ARUMUGA CHETTY

எங்கும் கிடைக்கும்

எங்கும் கிடைக்கும்

சுருட்டுகள்

TRADE MARK REGISTERED

PROPRIETOR: V. ARUMUGA CHETTY.

SHELL BRAND

ஷெல பிராண்டு

மணிலா சுருட்டுகள்

V. ஆறுமுக செட்டி

18, அண்ணா பிள்ளை தெரு, சென்னை—1

N. B.—பொடிக்கு உயர்ந்த பந்தர் புகையிலைகளும் எங்களிடம் கிடைக்கும்.

தாய் உள்ளம்
டைரக்ஷன்... ராம்நாத்
நாராயணன் கம்பெனி தயாரிப்பு..





இந்த மாதம் 9-ந் தேதி முதல் தமிழ் நாட்டினர் "தாய் உள்ளம்" தமிழ்ப் படத்தைக் கண்டு களிக்கின்றனர்.



உன்னத 'டெக்னிக்'கும், உள்ள
முருக்கும் காட்சிகளும் நிறைந்த
"தாய் உள்ளம்" படத்தில் வி.
நாகய்யா, மனோஹர், கணேசன்,
காமெடியன் ராமஸ்வாமி, எம்.
வி. ராஜம்மா, கே. ஆர். செல்லம்
தேவி முதலிய பிரபல
நடிக்கின்றனர்.

குண்டூசியைக் கேளுங்கள்

கலை சம்பந்தமாக உங்களுக்கு என்ன சந்தேக மிருந்தாலும் "குண்டூசி" யிடம் கேளுங்கள். இலவசமாகவே பதில் பெறலாம். யாருடைய மனமும் புண்படாதபடி தமாஷாக பதிலளித்து, தமிழ் சினிமா உலகை சீர்திருத்து வதே இப் பகுதியின் நோக்கமாகும்.
—ஆசிரியர்

எஸ். மஹமத் (பம்பாய்)

"ஓர் இரவு" படத்தில் ரயில் பாதையில் படுத்த சொர்ணத்தை யார் காப்பாற்றியது?

அப்படத்தின் டைரெக்டர்தான்! சொர்ணத்தை ரயில் பாதைக்குக் கொண்டுபோன டைரெக்டருக்கு அவளைக் கொல்லுவதற்குத் துணிபு இல்லை. ஆதலால், அவளைத் தப்ப விட்டுவிட்டு இப்போது இவர் தவிக்கிறார்!

வி. ஆர். தண்டபாணி (வண்டிப்பாளையம்)

"சிங்காரி"யைத் தயாரித்த நேஷனல் புரொடக்ஷன்ஸார் அடுத்தபடியாக எந்தப் படத்தைத் தயாரிக்கிறார்கள்?

அவர்கள் தங்கள் "சிங்காரி"க்கு ஜோடியாயிருக்கும்படி "மாப்பிள்ளை"யை வெளியில் அனுப்ப முயன்று வருகின்றனர்!

மாணவன் ஆர். கந்தசாமி (பங்களூர்)

நான் இரவு 10 மணி வரை விழித்திருக்க விரும்புகிறேன். ஆனால், எனக்கோ $8\frac{1}{2}$ மணி ஆனதுமே தூக்கம் வந்து விடுகிறது. இதைத் தடுக்க என்ன செய்யலாம்?

தூக்கத்தைப் போக்குவதற்கு பல முறைகளைக் கையாளலாம். "இன்று நான் பத்து மணிவரை நிச்சயம் விழித்திருப்பேன்" என்று சில தடவைகள் முழு நம்பிக்கையுடன் உரக்கச் சொல்லி, திடமாய் தீர்மானித்துக் கொள்ளும். அதன் பிறகும் தூக்கம் வருவதாகத் தோன்றினால் ஒரு இடத்தில் உட்கார்ந்திராமல் உலவி வாரும். குளிர்ந்த ஜலத்தால் முகத்தையும்—முக்கியமாகக் கண்களையும்—கழுவும். கொஞ்சம் காப்பியோ, டீயோ அருந்துவதும் உபயோகமாகவே இருக்கும். இப்படி ஒரு வாரம் தொடர்ச்சியாய் செய்தால் போதும். பிறகு 10 மணிக்கு முன்னால் உம்மைத் தூங்கும்படி யாராவது வற்புறுத்தினால் கூட உமக்குத் தூக்கம் வராது.

டி. முருகேசன் (காரமடை)

தமிழ் நடிகர் யாருக்காவது சிங்கம், புலி, போன்ற காட்டு மிருகங்களுடன் சண்டையிடும் திறமை உண்டா?

என்ன இப்படிக் கேட்கிறீரே! நம் நடிகர்களில் பலர், உண்மையில், (நாடக மேடை) சிங்கம், புலி, குரங்கு போன்ற மிருகங்களுடன் சண்டையிட்டுவிட்டு சினிமாவுக்கு வந்தவர்களாயிற்றே!

கே. சுப்ரமண்யம் (சிம்மோர்)

"குண்டூசி" அட்டை மீது பெண்களுடைய படங்களையே வெளியிடுகிறீரே? ஏன்?

அழகிய அட்டைக்கு அழகு அளிப்பவர்கள் அவர்கள்தான் என்பது உமக்கே தெரியாதா, என்ன!

வை. சின்னப்பா (நாகப்பட்டினம்)

என். எஸ். கிருஷ்ணனின் வாழ்க்கைத் துணைவி யார்?

"துணைவிகள் யார் யார்!" என்று நீர் கேட்டிருக்க வேண்டும். வாழ்க்கையை நிர்ப்பயமாய் நடத்தக் கூடிய அளவுக்கு அவருக்குத் துணைவிகள்

காதலன் வரவை எதிர்பார்த்து குதூகலமா யிருக்கிருர் பி. கே. சரஸ்வதி—ராதா கிருஷ்ணு பிலிம்ஸார் தயாரித்து வரும் ''அந்தமான் கைதி'' படத்தில்.

உள்ளனர் என்பதை மட்டும் இப்பொழுது தெரிந்து கொள்ளும்.

ஆர். மஹாராஜ பிள்ளை (தாழக்குடி)

சில பத்திரிகைகள் நடிக நடிகைகளைப் பற்றிய அந்தரங்கச் செய்திகளை பகிரங்கப் படுத்துகின்றனவே. அவையெல்லாம் உண்மைதாளு?

சில சமயங்களில் இச் செய்திகளில் உண்மை கலந்திருப்பதும் உண்டு!

கே. ஆர். கணபதியா பிள்ளை (பேரளம்)

தற்போது தமிழ் நாட்டில் உலவி வரும் ''ராஜாம்பாள்'' படம் புதுப் படம்தாளு? அல்லது முன்பே எடுத்த பழைய படமா?

முன்பு ஒரு ''ராஜாம்பாள்'' படம், காலஞ்சென்ற டைரெக்டர் ஏ. நாராயணனுல் 1935ம் வருஷத்தில் வெளியிடப்பட்டது உண்மைதான். ஆனல், அதே படம் அல்ல இது. இவ்விரண்டு படங்களின் கதை மட்டும் ஒன்றேதான்.

சந்தான கிருஷ்ணன் (கும்பகோணம்)

''அண்ணி'' படத்தில் கோபுவாக நடிக்கும் மாஸ்டர் சேதுவின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

1/3 வாஸு தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை.

கே. வி. விநயகம் (முஸலீனி மைன்ஸ்)

''ஏக்தா ராஜா'' (ஹிந்தி ''மர்மயோகி'') படத்தில் லால் பகதூர் சிறுவனுக இருக்கும்போது அவனது தந்தை வாலிபன் மாதிரி காட்சியளிக்கிருர். பிறகு, லால் பகதூர் பெரியவனுகிவிட்ட சமயத்திலும் அவர் முன்போலவே தான் காட்சி யளிக்கிருர். இது சரியா? இதன் காரணம் என்ன?

அவர்தான் மர்மயோகி ஆயிற்றே. அவரைப் பற்றிய இதர மர்மங்களுடன் இதையும் நீர் சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

ச. கே. ராஜலக்ஷ்மி (சென்னை)

''பொன்முடி'' படத்தில் மாதுரி தேவியின் வாய் மூலம் ''நானேது மார்க்கம் காண்கிலேன்'' என்று ஒரு பாட்டைக் கேட்கிறேம். ஆனல் இந்தப் பாட்டை ஏன் ரேடியோவில் கேட்கவே முடியவில்லை?

இதற்கு ''நானேது மார்க்கம் காண்கிலேன்'' என்று பதில் கூறவேண்டியிருக்கிறது. ரேடியோ நிலயத்தினருக்கு எழுதினுல் அவர்கள் உங்கள் வேண்டுகோளைக் கவனிக்கக் கூடும்.

யு. ஏ. மஹமத் ஆகாம் (தஞ்சாவூர்)

"ஞானசௌந்தரி", "ராஜ விக்கிரமா", "வேலைக்காரி" ஆகிய படங்களுள் ராஜம்மாவின் நடிப்பு எந்தப் படத்தில் மிக நன்ருக இருக்கிறது?

"ஞான சௌந்தரி"யில் ராஜம்மா நடித்திருப்பதுதான் எனக்கு மிகப் பிடித்திருக்கிறது.

வி. கோவிந்தசாமி (யாழ்ப்பாணம்)

சினிமாவில் நடிக்கும் குமாரிகள் சினிமாவில் நடிக்கும் நடிகர்களையே மணந்து கொண்டு நடித்தால் சினிமாக் கலை முன்னேறும் அல்லவா?

சினிமாக் கலை முன்னேறுமோ, ஏதோ! ஆனல், சினிமா உலகில் 'புது முகங்'களைத் தேடுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் சிரமம் வெகுவாகக் குறைந்து போகும்!

அ. கருப்பையா (ஸ்ரீவில்லிப்புத்தூர்)

கே. டி. ருக்மணி ஏன் தற்போது சினிமாவில் நடிப்பதில்லை?

சினிமா உலகில் அதிவேகமான மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போது, பத்தாம் பசலி "பாட்டிகளெ"ல்லாம் சினிமாவில் நடிக்கவில்லையே என்று நீர் எதற்காக பரிதவிக்கிறீர் என்பதைச் சொல்லும்.

டி. ஆர். பழனிவேல் (திருவாசல்)

பணக்காரனின் பெண்ணை ஏழை மணக்கலாமா?

தாராளமாய் மணக்கலாம் — அந்தப் பெண்ணே, அவளது அப்பாவோ இதற்குச் சம்மதித்தால்!

எம். பரமசிவன் (தாட்பத்திரி)

லலிதா - பத்மினி சகோதரிகள் இது நாள் வரையில் சேர்ந்தே நடித்து வந்தார்களே. இப்பொழுது ஏன் சில படங்களில் தனியாகக் கூட நடிக்க முற்பட்டிருக்கிருர்கள்? இவர்களிடையே மனஸ்தாபம் ஏதேனும் உண்டா?

மனஸ்தாபம் ஒன்றுமில்லை. நேயர்களில் பலர், "இருவரையும் சேர்ந்

வசீகர ஸெண்ட்

நவயுகத்தின் நிகரற்ற அதிசயம்

எங்கள் "வசீகர ஸெண்ட்" காதலில் ஏமாற்றமுற்று வாழ்க்கையில் வெறுப்புற்றோருக்கு மதிப்பில்லா மாணிக்கமாகும். எந்த ஆணை, அல்லது பெண்ணை வசப்படுத்த விரும்புகிறீர்களோ அவர் அருகில் இந்த ஸெண்டை சில துளிகள் தெளியுங்கள். உடனே அவர் உங்கள் வசப்பட்டுவிடுவார். பிறகு உங்களைப் பிரிய அவருக்கு மனமே வராது. நூற்றுக் கணக்கானவர்கள் இதைப் பரீக்ஷித்திருக்கிருர்கள். தினசரி ஏராளமான பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிகின்றன. கிரக பீடைகள், நோய், இவைகளிலிருந்து காப்பாற்றி, ஐசுவரியத்தை அளிக்கும். வழக்குகளிலும், பரீக்ஷைகளிலும் வெற்றி, உத்தியோக உயர்வு, எல்லாம் ஏற்படும். உங்கள் நோக்கம் எதுவானலும் பலிக்கும். ஒரு தடவை பரீக்ஷியுங்கள். நூற்றுக்கு நூறு வெற்றி ஏற்படும். பலன் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்து விடுவோம். விலை ரூ. 1—15—0; தபால் செலவு தனி. வெளி நாடுகளுக்கு—5 ஷில்லிங் பி. பி. ஓ. இரண்டு புட்டிகள் ரூ. 3—4—0; வெளிநாடுகளுக்கு—8 ஷில்லிங் பி.பி.ஓ.

PROFESSOR,

B. S. DHAMI (MESMERIST)

(G. M.) JULLUNDUR City, (Pb.)

தார்ப் போலவே மணந்து கொள்ள விரும்புவதாக'' அடிக்கடி தெரிவித்து வந்தது அவர்களுக்குப் பயத்தை உண்டுபண்ணி விட்டது போலும்!

எஸ். மனோஹரன், (தாத்தப்பங்கார் பேட்டை)

நடிகை மாதுரி தேவி சொந்தமாக ஆரம்பித்திருக்கும் படக் கம்பெனியின் பெயரையும் விலாஸத்தையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மதராஸ் ஆர்ட் புரொடக்‌ஷன்ஸ், நெ. 4, மாசிமணி முதலி தெரு, தியாகராய நகர், சென்னை. 17.

பி. என். பாலகுரு. (வடகரை)

ஏவி. மெய்யப்பனின் விலாஸத்தைக் கட்டாயமாய் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏவி. மெய்யப்பன், ஏவி. எம். ஸ்டுடியோ, கோடம்பாக்கம், சென்னை-24.

பி. ஆர். பூ பிள்ளை (கொச்சிகாடே, இலங்கை)

தமிழ் சினிமா நக்ஷத்திரங்களில் நூற்றுக்கு எத்தனை பேர்கள் சொந்தக் குரலில் பாடுகிறார்கள்?

சொந்தக் குரலில் பாடி வருபவர்களை சுமார் 5 சத விகிதமாகக் கணக்கிடலாம்.

டி. எஸ். உமாபதி குருக்கள் (திருச்செங்கோடு)

தற்போதைய தமிழ் நடிகைகளில் நீர் யாருடைய நடிப்பை அதிகமாய் விரும்புகிறீர்?

மாதுரி தேவியின் நடிப்பையே நான் தற்போதைக்கு அதிகமாய் விரும்புகிறேன்.

எஸ். முகம்மது சிந்தா (மேலப்பாளையம்)

நடிகர் ரஞ்சன் சொந்தத்தில் ஒரு ஆகாய விமானத்தை வைத்திருப்பதாக என் நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

உண்மையல்ல; ஆனால் ரஞ்சனுக்கு விமானம் ஓட்டத் தெரியும் என்பது மட்டும் உண்மை.

எம். சின்னசாமி (கோயமுத்தூர்)

டி. பி. ராஜலக்ஷ்மியும், அவரது சகோதரர் டி. பி. ராஜகோபாலனும் நடித்த படம் எது?

பத்துப் பனிரண்டு வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் தயாராகி வெளிவந்த ''வீர அபிமன்யு'' படத்தில் இருவரும் நடித்திருக்கின்றனர்.

டி. வி. சேஷாத்திரி (திருவல்லிக்கேணி)

''மோஹன சுந்தர''த்தில் சப் இன்ஸ்பெக்டராய் நடித்திருக்கும் என். திருவேங்கடம் வேறு படங்களில் எதிலாவது நடித்திருக்கிறாரா?

''மைனர் ராஜாமணி'' படத்தில் பெண் வேஷம் போட்டுக் கொண்டு, பெண்களிடம் அகப்பட்டுக் கொண்டு தவித்தவர் இவர்தான். அதன் பின் இவர் பல படங்களில் உப பாத்திரங்களில் நடித்திருக்கிறார்.

''புரட்சிப் பித்தன்'' (மதுரை)

ஜெமினி வாஸன் ஒரு சாதாரணக் கதைக்கு முப்பத்தைந்து லக்ஷம் ரூபாயையும், மூன்றரை வருஷ காலத்தையும் செலவிட்டுத் தயாரித்தார். பிறகு பிரஞ்சுக் கதையான ''கார்ஸிகன் பிரதர்ஸ்''ஸை ''அபூர்வ சகோதரர்கள்'' படமாக்கினார். சமீபத்தில், தெலுங்கு ''சம்சார''த்தை வாங்கித் தமிழ்ப்படுத்தி வெளியிட்டார். இப்பொழுதோ ''பாதாள பைரவி''யை ஹிந்தியாக்கப் போவதாகக் கேள்விப்படுகிறேன். இப்படியாக ஜெமினி தயாரிப்புகள் இரவலும், தழுவலுமாகவே இருக்கின்றனவே! ஜெமினி கதை இலாகா உண்மையில் என்னதான் செய்கிறது?

ஜெமினி கதை இலாகாவினர் என்னவோ ஓய்வு ஒழிவின்றி கதைகளை எழுதித் தள்ளிக் கொண்டேதான் இருக்கின்றனர். ஆனால், அவை படங்களாக வந்து சினிமா உலகை நிரப்புவதற்குப் பதில், கதைகளாகவே பீரோக்களில் நிரம்பிக் கிடக்கின்றனவாம்!

நக்ஷத்திர கிரிக்கெட்



1. வசுந்தரா தேவி (ஒரு காப்டன்)
2. காஞ்சனை, டி. சூர்ய குமாரி (மற்றொரு காப்டன்) குமாரி கமலா ஆகியோர்.
8. கோபால் ரெட்டி, சென்னை கவர்னர், சென்னை நகர மேயர்.

1. காமெடியன் சிவராவ், 2. கணேசன், சாரங்கபாணி, என். எஸ். கிருஷ்ணன். 3. ராஜ் கபூர் 4. 'புளிமூட்டை' 5. கெப்ப் ராஜ், எமது மானேஜர் கே. ராதா கிருஷ்ணன்.

9. வி.எச். நாராயண் ராவ். 10. டி. ஜி. கமலா தேவி. 11. புதிய முகம் ராஜகுமார், டி. ஏ. மதுரம். 12. ரங்கா ராவ். 13. காஞ்சனை.



6. எஸ் வி. ஸஹஸ்ரநாமம் 7. டி. ஆர். ராஜனி. 8. ராதாகிருஷ்ணன், கணேசன், ஸ்ரீராம். மனோஹர்.

Parthan



1. என். டி. ராமாராவ், ராதாகிருஷ்ணன், கான்-திவான்.

2. சாரங்கபாணியும், மனோஹரும்.





3. இடைவேளையில் நக்ஷத்திரங்கள்.
4. பங்கெடுத்துக் கொண்டவர்கள்.
5. ராஜமன்னாரிடம் பரிசு பெறுகிறார் கணேசன்.

Parthan

நக்ஷத்திர கிரிக்கெட்

மேயரின் க்ஷயரோக நிவாரண நிதிக்கு உதவுவதற்காக சென்ற மாதம் 27-ந் தேதி, சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் சினிமா நக்ஷத்திரங்களின் கிரிக்கெட் ஆட்டம் ஒன்று நடைபெற்றது. அது எவருக்கும் வெற்றி தோல்வி இல்லாமல் 'டிராவாக' முடிவுற்றது. பல சிறுவர்கள் உள்பட சுமார் 15000 ரஸிகர்கள் அந்த ஆட்டத்தைப் பார்க்க வந்திருந்தனர். ஒரு கட்சிக்கு வசுந்தரா தேவியும், மற்றொரு கட்சிக்கு டி. சூர்ய குமாரியும் காப்டன்களாக இருந்தார்கள். பூவா தலையா பார்த்ததில் வசுந்தரா தேவியின் கோஷ்டிக்கு முதலில் ஆடும் சந்தர்ப்பம் கிடைத்தது. கட்சிக்கு 14 ஆட்டக்காரர்கள் வீதம் அவர்கள் பிரிந்து ஆடினார்கள். வசுந்தரா கோஷ்டி மொத்தம் 122 ரன்கள் எடுத்தது. பிறகு ஆடிய சூர்ய குமாரியின் கோஷ்டி ஆட்ட முடிவில் 11 விக்கெட்டுகளுக்கு 93 ரன்கள் எடுத்திருந்தது.

ஹாஸ்ய நடிகர்களான சாரங்கபாணி, சிவராவ், புளிமூட்டை ராமசாமி ஆகிய மூவரும் 'கோனஷ்டைகள்' செய்து எல்லோரையும் வயிறு குலுங்கும்படி சிரிக்க வைத்தனர். மொத்தத்தில், அந்த ஆட்டத்தை ஜனங்கள் மிகவும் ரசித்தனர்.

'அம்பையர்'களும் கிரிக்கெட் விதிகளை கண்டிப்பாக அனுசரிக்காமல் சிறிது விட்டுக் கொடுத்தனர்.

சென்னை கவர்னரும் வந்திருந்தார். ஆரம்பத்தில் ஆட்டக்காரர்கள் கவர்னருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டனர். ஆட்ட முடிவில் மேயர் ஸி. எச். ஸிக்பதுல்லா ஆட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்தார். பிறகு, பிரதம நீதிபதி ஸ்ரீ. பி. வி. ராஜமன்னார் ஒவ்வொரு ஆட்டக்காரருக்கும் ஒரு கோப்பை பரிசளித்தார். எல்லோரையும்விட அதிக ரன்கள் எடுத்ததற்காக நடிகர் கணேசனுக்கு பிரபல நகை வியாபாரியான உம்முடி பங்காரு செட்டியார் ஒரு விசேஷப் பரிசளித்தனர்.

ஆட்டக்காரர்கள் சார்பில் ஸ்ரீ. என். எஸ். கிருஷ்ணன் பேசினார். ஆட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத பல நக்ஷத்திரங்களுக்கு அவர் 'டோஸ்' கொடுத்தார். அதன் பின் டாக்டர். பி. வி. செரியன் வந்தனோபசாரம் கூறினர்.

ஆட்டத்தில் பின்கண்ட நக்ஷத்திரங்கள் பங்கெடுத்துக் கொண்டனர்:—

வசுந்தரா தேவி கோஷ்டி:—வசுந்தரா தேவி, விசுவநாதன், டி. ஏ. மதுரம், பாலசந்தர், ராஜ்கபூர், டி. ஆர். ராமச்சந்திரன், என். எஸ். கிருஷ்ணன், கணேசன், புளிமூட்டை ராமசாமி, குமாரி கமலா, கெம்ப்ராஜ், நாகேஸ்வர ராவ், ஸ்ரீராம், மனோஹர்

டி. சூர்ய குமாரி கோஷ்டி :— டி. சூர்ய குமாரி, டி. ஏ. ராம ராவ், சகஸ்ரநாமம், காஞ்சனா, ரங்கராவ், கிருஷ்ணமூர்த்தி, கரன் திவான், டி. ஆர். ரஜினி, நாராயண ராவ், சிவராவ், சாரங்கபாணி, என். டி. ராமராவ், டி. ஜி. கமலாதேவி.

கரன் திவான், சூர்யகுமாரி இவர்களுடன் "குண்டூசி" மானேஜர் கே. ராதாகிருஷ்ணன் 'குஷி'யாகப் பேசிக்கொண்டிருக்கிறார்.

இது செய்தி

தியேட்டர்களில் படங்கள்

சினிமாத் தியேட்டர்களில் உள்ளேயும், தாழ்வாரங்களிலும், மாட்டப்படும் போஸ்டர்கள், போட்டோக்கள் ஆகியவைகளை முன்—தணிக்கையிட பம்பாய் சர்க்கார் ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. "சினிமாப் படத்தில் இல்லாத காட்சிகள் அடங்கிய போஸ்டரையோ, படத்தையோ தியேட்டர்களில் மாட்டி வைப்பது கூடாது. தெளிவாக ஆபாசமில்லாவிடினும், "ஆபாசத்திற்கு இடமளிக்கும் படங்களை மாட்டக் கூடாது" என்று அந்த உத்தரவு கூறுகிறது.

மூன்று அதிர்ஷ்டசாலிகள்

சென்ற மாதம் 25-ம் தேதி சென்னையிலிருந்து மூன்று அதிருஷ்டசாலிகள் மேனாட்டுக்குப் புறப்பட்டுப் போனார்கள். ஜெமினி ஸ்டுடியோ அதிபர், தம் ஸ்டுடியோவின் ஒலிப் பதிவு நிபுணரான பிச்ஸ், லாபரடரி தலைவரான வி. ராமஸ்வாமி, ஆர்ட் டைரெக்டரான எம். எஸ். ஜானகிராம் மூவரையும், பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறார். இம்மூவரும் சுமார் மூன்று மாதம் அந் நாடுகளில் சுற்றி அவர்கள் டெக்னிக் விஷயங்களில் அடைந்துள்ள அபிவிருத்திகளை அறிந்து வருவார்களாம். மேனாடு சென்றுள்ள இவர்களைப் பாராட்டி வழியனுப்பு உபசாரம் நடத்த ஒரு கூட்டம் சென்ற மாதம் 17-ம் தேதி, ஜெமினி புல் வெளி மைதானத்தில் நடைபெற்றது. ஜெமினி விளம்பர இலாகா அதிகாரி வி. கே. என். சாரி, மேனாடு செல்லும் மூவருக்கும் வாழ்த்துக் கூறினார். பிறகு ஸ்டுடியோ நிர்வாகிகள் பலர் இம்மூவரின் திறமையையும் பாராட்டி அவர்கள் மேனாடு சென்று சுகமே திரும்புமாறு பிரார்த்தித்தனர். முடிவில் ஜெமினி அதிபர், இந்த விஜயத்தின் மூலம் அவர்கள் தங்களுக்கும் தங்கள் ஸ்டுடியோவுக்கும் பயன் தரத் தக்க விஷயங்களைக் கிரகித்து வருவார்கள் எனத் தாம் நம்புவதாக அவர் கூறினார்.

நாகூர் ஸினி புரொடக்ஷன்ஸின் "அமர கவி"யில் பாகவதர் தோன்றும் ஒரு கட்டம்.

லண்டனில் ராமய்யா!

கதாசிரியர், டைரெக்டரான பி. எஸ். ராமய்யா லண்டனுக்குப் போயிருக்கிறாரென்று தெரிகிறது. பம்பாயில், தயாராகியுள்ள "ஆன்" (தமிழ்ப் பதிவு) படம் சம்பந்தமாகவே போயிருக்கிறாராம்.

தாணு ஆர்ட் டைரெக்டரானார்

"ஆனந்த விகடன்" பத்திரிகையின் மூலம் பிரபலமான கார்ட்டூனிஸ்ட்டும் ஏற்கெனவே "மிஸ். மாலினி" படத்துடன் காட்டப்பட்ட கார்ட்டூன் படத்தைத் தயாரித்தவருமான "தாணு" சினிமாத் துறையில் சேவை செய்ய வந்திருப்பதை வரவேற்கிறோம். நாராயண் கம்பெனியாரின் "தாய் உள்ளம்" படத்

தின் ஆர்ட் டைரெக்டர் இவர்தான். இது தவிர நடிகை மாதுரி தேவியின் சொந்த தமிழ்-தெலுங்குப் படங்களான "காதலி", "ரோஹிணி" ஆகியவைகளுக்கும் இவர் ஆர்ட் டைரெக்டராக ஒப்பந்தம் செய்யப் பட்டிருக்கிறார். எனெஸ்கே பில்ம்ஸின் "தோட்டக்கார"னுக்கும் இவரே அந்தப் பொறுப்பை ஏற்கக் கூடும் என்று தெரிகிறது.

இலங்கைக்கு ஸி. ஆர். ராஜகுமாரி

நாட்டிய நடிகை ஸி. ஆர். ராஜகுமாரி இம் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யப் போகிறாராம். அவரது பல நாட்டியக் கச்சேரிகள் அங்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளனவாம்.

ராஜ்கபூர் தம்பதிகளுக்கு உபசரிப்பு

சென்னையில் நடைபெற்ற சினிமா நக்ஷத்திரங்களின் கிரிக்கெட் ஆட்டத்திற்கு வந்து பங்கெடுத்துக் கொண்ட, "அவாரா" படத் தயாரிப்பாளரும், நடிகருமான ராஜ்கபூருக்கும், அவரது மனைவிக்கும் ஜூபிடரின் சார்பில், ஜூபிடர் முக்கியஸ்தர் எம். சோமசுந்தரம் தமது மாளிகையில் அரிசிக் கலப்பற்ற ஒரு விருந்து அளித்து உபசரித்தார். மேற்படி உபசரிப்பில் சென்னை பட உலக பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

'மாங்கல்யம்'

கேசரி புரொடக்ஷன்ஸ் என்ற (புதிதாக ஆரம்பமாகியுள்ள) கம்பெனி "மாங்கல்யம்" என்ற சமூகப் படத்தைத் தெலுங்கில் தயாரிக்க முயற்சிகள் செய்து வருவதாகத் தெரிகிறது.

"ஆத்ம சாந்தி"

சிட்டாடல் பில்ம்ஸார் "ஆத்ம சாந்தி" என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருவதாக அறிவித்திருக்கின்றனர். இப்படம் மலையாளத்திலும் தயாரிக்கப்படுமெனத் தெரிகிறது. படங்களை ஜோஸப் தளியத் டைரெக்ட் செய்து வருகிறார். படங்கள் சிட்டாடல் ஸ்டுடியோவில் தயாராகி வருகின்றன.

"வளையாபதி"

மாடர்ன் தியேட்டர்ஸார், சிறந்த தமிழ் இலக்கியமான "வளையாபதி"யைத் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் படமாக்கும் வேலையில் முனைந்திருக்கிறார்களாம். பிரபல நக்ஷத்திரங்கள் பலர்

இரவில் தனியாக இருக்கும்போது
தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOKSHASTRA
(Private)

கொக் சாஸ்திரம்
(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தில் சரிவரக் கூற முடியாத பல விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்றாகவும், தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்து கொள்ளுவார்கள். நல்ல விதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம் தான் வெகு நன்றாயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—8—0

BED ROOM PHOTOS
படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு ஸெட்டுக்கு ரூ. 1-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட ஒரு சாம்பிள் செட்டின் விலை அணா 0-12-0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்க வேண்டும்.

FRENCH PHOTO SUPPLY Co.,
(G.M.) Jullundur City.

நடிக்கும் இப்படம் பெரிய அளவில் தயாரிக்கப்படும் படமாக இருக்குமாம்.

"ஆத்ம ஸகி"

நீலா புரொடக்ஷன்ஸ், என்ற படத் தயாரிப்பாளர்கள் "ஆத்ம ஸகி" என்ற படத்தைத் தமிழ்-மலையாளம் ஆகிய இரு பாஷைகளிலும் தயாரித்து வருவதாக அறிவித்திருக்கின்றனர். இப்படத்தின் வசனம், பாடல்களை "கம்பதாஸன்" எழுதியிருக்கிருர். படங்கள், திருவனந்தபுரம், 'மெர்ரி லாண்ட்' ஸ்டுடியோவில் தயாராகி வருகின்றன. ஜி. ஆர். ராவ் என்பவரின் டைரெக்ஷனில் தயாராகும் இப் படங்களில் பங்கஜவல்லி, எம். என். நம்பியார் குமாரி தங்கம் முதலிய பலர் நடித்து வருகின்றனர்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

இம்மாதம் 4-ம் தேதியன்று சென்னை, சினிமா ரஸிகர்கள் சங்கத்தினர், உட்லண்ட்ஸ் ஹோட்டலில், எம். ஒட்வெல் தம்பதிகளுக்கு ஒரு விருந்து அளித்தார்கள். எம். ஒட்வெல் என்பவர் அமெரிக்க செய்தி இலாகாவின் சலனப்பட ஆபீஸர். விருந்துக்குப் பிறகு "சினிமாவும் சர்வகலாசாலைகளும்" என்பது பற்றி ஒட்வெல் பேசினுர்.

முதியோர் கல்வி

சென்னை மாகாணத்தில், முதியோர் கல்வி அபிவிருத்திக்கு சினிமாப் படம் எவ்வளவு தூரம் உபயோகமாக இருக்கும் என்பதைப் பரிசீலனை செய்து, கல்வி—சினிமாப் பட ஸ்தாபன டைரெக்டர் கே. வெங்கடராமன் ஒரு யாதாஸ்தை தயாரிப்பார். மாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலுமுள்ள பலதரப்பட்ட மக்களுக்குத் தகுதியான படங்கள் எவை என்பதையும், அவைகளைக் கொண்டு சிறந்த பலன்கள் அடைவதெப்படி என்பதையும் பற்றி அவர் பரிசிலனை செய்யப்போகிருர்.

சென்னையில் ரஷ்ய பிரதிநிதி கோஷ்டி

சர்வதேச பில்ம் விழாவில் கலந்துகொள்ளுவதற்காக ரஷ்ய பிரதிநிதிகள் கோஷ்டியினர் இம் மாதம் முதல் தேதி பம்பாயிலிருந்து விமானத்தில் இங்கு வந்து சேர்ந்தார்கள். ரஷ்ய சினிமாக்

டி. ஆர். ராஜகுமாரி தண்ணீர் முகந்துவரச் செல்லும் இக் காட்சியை, சமீபத்தில் தமிழ் நாடெங்கும் வெளிவந்துள்ள நாகூரின் "அமரகவி" தமிழ்ப் பட்த்தில் காணலாம்.

கலை உதவி மந்திரியான ஸ்ரீ. நிக்கோலா சுமிதாவ் இந்தக் கோஷ்டியின் தலைவராவார். விமான நிலையத்தில் மத்திய பிலிம் சென்ஸார் போர்டின் பிரதேச அதிகாரி கே. சீனிவாஸன், என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டைரெக்டர் கே. சுப்ரமண்யம் உட்பட பலர் அவர்களை வரவேற்றனர். அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டது. என். எஸ். கிருஷ்ணன் அவர்களை வரவேற்றுப் பேசினர். நிக்கோலா சுமிநாவ் தூது கோஷ்டியின் சார்பில் வரவேற்புக்குப் பதிலளித்தார். பதினன்கு பேர்கள் கொண்ட இந்தக் கோஷ்டியில் சினமாக் கலையில் தேர்ச்சி பெற்று ஸ்டாலின் பரிசு பெற்றவர்களான நடிகைகளும் வசனம் எழுதுவோரும் கேமிராமென்களுமாகப் பலர் அடங்கியுள்ளனர்.

ஹாலிவுட் புரொட்யூஸரின் திட்டம்

இந்தியாவில் ஏற்கெனவே "தி ரிவர்" (நதி) என்ற படத்தை எடுத்த ஹாலிவுட் புரொட்யூஸர் ஸ்ரீ. கென்னத் மெக் எல்.டௌனி, மேலும் 3 டெக்னிக் கலர் படங்களை இந்தியாவில் எடுக்கத் திட்டம் போட்டுள்ளார். "தி ரிவர்" படத்திற்குச் செய்ததைப் போலவே மேற்சொன்ன மூன்று படங்களிலும் இந்திய டெக்னீஷ்யன்களும் நடிகர்களும் முக்கியத்துவம் வகிப்பார்கள் என்று தெரிகிறது.

தமிழ் நாட்டில் வெற்றிகரமாய் ஓடிக் கொண்டிருக்கும் "அம்மா" தமிழ்ப் படத்தில் எம். என். நம்பியாரும், பி. எஸ். சரோஜாவும் தோன்றும் ஒரு கட்டம் இது.

ஸ்ரீ சரஸ்வதி நாடக சபா

ஈரோடில், ஸ்ரீ சரஸ்வதி நாடக சபா என்ற பெயரில் ஒரு நாடக சபா ஆரம்பமாகியுள்ளதாம், இவர்களது பல நாடகங்களின் ஒத்திகைகள் நடைபெற்று வருவதாகவும், தமிழ் நாட்டில் பல நகரங்களில் நாடகங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

இந்தோ-பிரிட்டிஷ் தயாரிப்பு

லண்டனிலுள்ள ஒரே யொரு இந்திய புரொட்யூஸரான ஸ்ரீ. விஷ்ணுப் சென் ஹெர்பர்ட் வில்காக்ஸ் அன்னு நீகிள் புரொடக்ஷன்ஸுடன் கூட்டாகச் சேர்ந்து, இவ் வருஷம் இந்தியாவில் ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் ஒரு டெக்னிக் கலர் படம் எடுக்கப் போகிருராம். இப்

படத்தில் கதா பாத்திரமாக நடிப்பதற்கு அசோக் குமார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். இப் படத் தயாரிப்புக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஸ்ரீ சென் இப்பொழுது பம்டாய்க்கு வந்திருக்கிருர்.

பெண்கள் நாடகம்

சென்னை, கிருஷ்ண விஜய சபா அங்கத்தினர்கள் சென்ற மாதம் 12-ம் தேதி மியூஸியம் தியேட்டரில் "சகுந்தலா" நாடகத்தை நடித்தார்கள். இதில் ஒரு விசேஷம்—இந்த சபா அங்கத்தினர்கள் அனைவரும் பெண்கள். அந்த நாடகம் "நாரதர்" ஸ்ரீனிவாஸ ராவின் தயாரிப்பு. நாடகத்திற்கு கனம் நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் தலைமை வகித்தார்.

இரு நாடகங்கள்

சென்ற மாதம் 26-ம் தேதியன்று, ஸ்டேஷனரி ஆபீஸ் இலக்கிய சங்கத்தினர் "குல விளக்கு" என்ற நாடகத்தை நடித்தார்கள்.

சென்ற மாதம் 20-ம் தேதி "பொன்னியின் புது வாழ்வு" என்ற நாடகம் சென்னை ஒற்றவாடைத் தியேட்டரில் நடைபெற்றது. மாடர்ன் ஆர்ட்ஸ் அக்கேடமியினர் மேற்படி நாடகத்தை நடித்தார்கள்.

நரஸு ஸ்டுடியோஸ்

இம்மாதம் 8-ம் தேதி, புத்துயிர் பெற்றுள்ள நரஸு ஸ்டுடியோவின் ஆரம்ப பூஜை விழா நடைபெற்றது. வி. எல். நரஸுவின் அழைப்பிற்கிணங்க அன்று பல பத்திரிகாசிரியர்களும் படப் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

பத்திரிகைக் காட்சிகள்

இம்மாதம் 8-ம் தேதி சென்னை கேஸினோ தியேட்டரில் நாராயணன் கம்பெனியாரின் "தாய் உள்ளம்" பத்திரிகைக் காட்சி நடைபெற்றது. இப்படம் இம்மாதம் 9-ம் தேதி முதல் தமிழ் நாடெங்கும் காட்டப்படுகிறது.

சித்ரா டாக்கீஸ் நிர்வாகிகளும், பிலிம் விழாவுக்காக விஜயம் செய்துள்ள சோவியத் பிலிம் தூது கோஷ்டியினரும், "மூஸ் ஸோர்க் கை", "டூன்டாஸ் மைனர்ஸ்" என்ற இரு படங்களை பத்திரிகைக்காரர்களுக்கும், பட உலகப் பிரமுகர்களுக்கும் திரையிட்டுக் காட்டினர்கள்.

தளதளப்பான வாலிபமும் பிரகாசமிக்க வீரியமும் பெற

புனித மஹாத்மாவின்
பிரத்தியேக மூலிகை மருந்து

காஷ்மீர் மாத்திரைகள்:—சாதாரண பலஹீனத்திற்கு மிகச் சிறந்த மருந்து. இது தளர்ந்துபோன நரம்புகளுக்கு ஜீவனளித்து, தேகத்தில் வலிவை உண்டுபண்ணும். வாலிபம் குறைந்து போகாமல் காத்து, சிறந்த இல்லற சுகத்தைப்பெற உதவும். வீரிய விருத்திக்கு நிகரற்ற மருந்து. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—8—0.

காஷ்மீர் பூச்சு எண்ணை:—இது ஆண் குறியின் எல்லாக் கோளாறுகளையும் போக்குவதற்கான வெளிப் பூச்சுத் தைலம். வாலிபச் சேஷ்டைகளாலோ அல்லது இதர எந்தக் காரணத்தாலோ இழந்த பலத்தைத் திரும்ப அளிக்கும். கோளாறுகளைச் சரிப்படுத்தும். நரம்புகளுக்கு ஜீவனை உண்டுபண்ணும். விலை ரூ. 2—8—0.

Prof. **B. S. SIDHU, HALKA No. 6 (G.M.),**
Jullundur City.

மனோஹர் பிக்சர்ஸ் தயாரிப்பான "மனோஹரா" தமிழ்ப் படம் உன்னத முறையில் தயாராகி வருகிறது. அதில் பலே அலங்காரங்களுடன் காட்சி அளிக்கிறார் பி. கே. சரஸ்வதி.

"காதைத் தொடுவதற்கு இதுதான் சுலப மான வழி" என்று பத்மினி கூறுகிருர் போலி ருக்கிறது!—நாகூரின் "அமரகவி" படத்தில்.



பாகவதர் நடிக்கும் படத்திற்கே தனி மதிப்பு.
அதிலும் "அமரகவி" ஐந்து வருஷங்களுக்குப்
பிறகு வருகிறதென்றால் கேட்கவேண்டுமா

"காதல் என்று பசப்பியதெல்லாம் வெறும் பச்சைப் புளுகு: இந்த வஞ்சகியின் படம் இங்கு எதற்கு!' என்று திக்குறிச்சி சுகுமாரன் நாயர் படத்தைக் கீழே போட்டு உடைக்கப்போகிறார். (அந்தமான் கைதி)

பொதுஜனம் பேசுகிறார்

*வேண்டாமே!

பொதுவாக தமிழ்ப் படவுலகம் இன்று எத்தனையோ முன்னேற்றமடைந்திருக்கிறது. காட்சி அமைப்பு ஒளி, ஒலிப் பதிவு முதலிய பல விஷயங்களில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால், ஒன்றிரண்டு விஷயங்களில் மட்டும் இன்னும் சீர்திருந்தவில்லை. குறிப்பாக, இந்த ஆங்கில மோகம் இருக்கிறதே அது தமிழ்ப் படங்களைப் படுத்தி வைக்கும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஆங்கில மெட்டுக்களில் ஒன்றிரண்டு பாடல்களை எப்படியாவது புகுத்தி விடுகிறார்கள். ஹிந்தி மெட்டுகளில் பாட்டுக்கள் இருப்பது தவறு என்று சொல்வது எவ்வளவு நியாயமோ அவ்வளவு நியாயம் ஆங்கில மெட்டுக்களில் பாட்டுக்கள் கூடாது என்று சொல்வதிலும் இருக்கிறது. ஆங்கில மெட்டுக்கள் மட்டுமா? ஆங்கில நடனங்களையும் புகுத்தி விடுகிறார்கள் பிரகஸ்பதிகள்! நம்முடைய பரத நாட்டியமாக இருந்தால்கூட, அநாவசியமாக நடனங்கள் தேவையில்லை என்று நம்மில் பலரும் முணுமுணுக்க ஆரம்பித்திருக்கும் போது இங்கிலீஷ் நாட்டிய விருந்து மருந்தாக அமைந்து விடுகிறது! 'ஆங்கிலம்' என்ற காரணத்தால் எதையும் வெறுக்கச் சொல்லவில்லை. ஆனால், தமிழ்ப் படங்கள் இயன்ற வரையில் தமிழ்ப் படங்களாக இருக்க வேண்டும் என்றுதான் கூறுகிறேன்.

வெ. ர. நாகராஜன்
மயிலாப்பூர்.

கவனிக்க வேண்டும்

சினிமாப் படங்களில் சிறுவர் சிறுமிகளை காதல் கட்டங்களில் காதலர்களாக நடிக்கச் செய்கிறார்கள். அப்படங்களை நம் சிறுவர் சிறுமிகள் பார்த்துவிட்டு, அதே மாதிரி விளையாடவும் ஆரம்பித்து விடுகிறார்கள். நாளடைவில் பள்ளிப் படிப்பும் அவர்களுக்குக் கசந்துபோய் விடுகிறது. பெற்றோர்களுக்கு இவைகள் தெரிந்தவுடன், அவர்கள் மனது சஞ்சலப் பட்டுப் போய் படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். வயது ஆக ஆக போக்கிரித்தனம் வளர்ந்து விடுகிறது. தெருவில் போகும் பெண்களைப் பரிகாசம் செய்வதும், அவர்கள் மீது கல் எறிவதும்—இவைபோலப் பல விஷயங்கள் செய்கிறார்கள். வயதுக்கு மிஞ்சியே கெட்ட நடத்தைகளில் புகுந்துவிடுகிறார்கள். இக்காரணங்களினால் எத்தனையோ குடும்பங்கள் சீரழிந்து போகின்றன. ஆதலால் சிறுவர் சிறுமிகளைப் படங்களில் காதலர்களாக நடிக்கச் செய்யாமல் இருக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆர். ராஜேஸ்வரி,
திருவாரூர்.

படங்களில் பின்னணி வாத்தியம்

தற்காலம் வெளிவரும் பெரும்பாலான தமிழ்ப் படங்களில் பின்னணி வாத்தியம், ஆரம்பம் முதல் முடிவுவரை இடைவிடாமல் ஒலிக்கிறது. படங்களில், பாடும் கட்டங்களில் மட்டுமின்றி, நடிகர்கள் சாதாரணமாகப் பேசும்பொழுது கூட இசைக் கருவிகள் ஒலிக்கின்றன. இது நம் காதைத் துளைப்பதுமல்லாமல் நடிகர்கள் பேசும் வசனங்களைப் புரியவொட்டாமலும், அவர்களது நடிப்பை ரஸிக்க முடியாமலும் செய்து விடுகிறது. மேலும், பேசும் பொழுது பின்னணியில் வாத்தியம் ஒலிப்பதென்பது இயற்கைக்கே முரணானது. பாடும் கட்டங்களைத் தவிர, மற்ற இடங்களில் பின்னணி சங்கீதமே கூடாது என்பதே என்

* பரிசு பெற்ற கடிதம். எழுதியவர் : வெ. ர. நாகராஜன், c/o பார்த் லஞ்ச் ஹோம், சென்னை—4.

எண்ணம். இனி வரும் படங்களிலாவது இக் குறை நீக்கப்படுமா?

பி. ஷண்முகவடிவேலு,
கும்பகோணம்.

ஆர்ட் டைரெக்ஷன்

தமிழ்ப் படங்களில் பல குறைபாடுகள் உள்ளன என்பது யாவரும் அறிந்த உண்மை. படத் தயாரிப்பாளர்களும்—டைரெக்டர்களும்-'ஆர்ட் டைரெக்ஷன்' விஷயமாக கவனம் செலுத்தாதது அப்படிப்பட்ட குறைபாடுகளில் ஒன்று. ஒரு படத்தைச் சிறந்ததாகவும், மக்கள் மனதை நன்கு கவரக்கூடிய வகையிலும் அமைக்க வேண்டுமென்றால் 'ஆர்ட் டைரெக்ட'ரின் திறமை அதற்கு மிகவும் அவசியம். மனிதனுக்கு ஆத்மீக சுத்தம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது "ஆர்ட் டைரெக்ஷன்." சினிமாவைப் பொறுத்த வரையில், 'ஆர்ட் டைரெக்டர்' ஒரு படத்தில் தன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் முன்பு—அந்தக் கதை எந்த தேசத்தில் நடக்கிறது—எந்தக் காலத்துப் பாத்திரங்களை சித்தரிக்கிறது என்பன போன்ற விஷயங்களில் கவனம் செலுத்தி அக் காலத்திற்கேற்ற ஆடை, அலங்காரம், சமூக, அரசியல் சூழ்நிலைகளிலேயே படத்தைத் தயாரிக்க டைரெக்டருக்கு உதவி செய்யவேண்டும். "ராம ராஜ்யம்", "மீரா", ராஜ் கமாலின் "சகுந்தலா" போன்ற படங்கள் சிறந்து விளங்குகின்றன என்றால் 'ஆர்ட் டைரெக்ட'ரின் திறமையும் அதற்கு ஓரளவு காரணம் என்று தைரியமாகச் சொல்லலாம். ஆகவே அந்த அம்சத்தில் கவனம் செலுத்தினால்தான் தமிழ்ப் படங்களின் தரம் உயர வழியுண்டு.

கெ. சுபபிரமணியம் பி.ஏ.,
சிவகங்கை.

முடிவு கட்டுங்கள்!

சமீபத்தில் வெளியான ஒரு ஆங்கிலப் படத்திற்கு இரட்டிப்புக் கட்டணங்கள் எல்லா இடங்களிலும் வசூலிக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து மற்றொரு ஆங்கிலப் படத்திற்கும் இரட்டிப்புக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. இதை இப்படியே வளரவிட்டுக் கொண்டு போனால் இது சகஜமாகிவிடும். நாளையே நமது தமிழ், தெலுங்கு ஹிந்தி படமுதலாளிகளும் தங்கள் தங்கள் படங்களுக்குக் கட்டணங்களை இரட்டிப்பாக்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. சர்க்காரும் இதனால் தங்கள் கஜானாக்களுக்கு வரியாக அதிகமான வருவாய் கிடைக்கிறது என்ற மனப்பான்மையிலேயே சும்மா இருப்பதாகத் தெரிகிறது. சினிமாக் கலை நசிக்க வேண்டும் என்பது சர்க்காரின் நோக்கமானால் சர்க்காரின் மௌனக் கொள்கை வரவேற்கத் தக்கதே. ஆனால் நாள் முழுவதும் ஆபீஸிலும் தொழிற்சாலைகளிலும் உழைத்து விட்டு அலுத்துவரும் ஜனங்களின் சோர்ந்துபோன உள்ளங்களுக்குப் புத்துணர்ச்சி யூட்ட ஒரு பொழுது போக்கு அவசியமென்றும் அந்தப் பொழுது போக்குக்காக சினிமாக்கள் பயன்பட வேண்டுமென்றும் சர்க்கார் எண்ணுவார்களேயானால், அந்த பொழுது போக்கை மக்களுக்கு எளிதில் குறைந்த செலவில் கிடைக்கும்படி செய்வது அவர்கள் கடமை. பட முதலாளிகள் சினிமாக் கொட்டகை முதலாளிகள் இவர்களின் பேராசைக்கு சர்க்கார் இடமளிக்கக்கூடாது.

எஸ். ராஜலக்ஷ்மி, வேலூர்.

தடை செய்வார்களா?

இவ்வளவு நாட்களாக, நம் தமிழ்ப் படங்களில் ஆண்கள் மட்டும் கட்டிப் புரண்டு சண்டை யிடுவதைப் பார்த்து வந்தோம். ஆனால், சமீப காலத்தில் வெளிவந்த சில படங்களில் பெண்களும் ஒருவரை யொருவர் தலையைப் பிய்த்துக் கொண்டு சண்டையிடும் கண்ணராவிக் காட்சியையும பார்க்க வேண்டியதாயிருக்கிறது. உதாரணமாக, சமீபத்தில் வெளிவந்துள்ள இரண்டு படங்களிலுள்ள காட்சிகளை எடுத்துக் கொள்வோம். "மோஹன சுந்த"ரத்தில், வரலக்ஷ்மியும், சுசீலாவும் ஒருவரை யொருவர் அடித்துக்கொள்வது காணச் சகியாத கேலிக் கூத்தாக இருக்கிறது. கதையின் போக்குப் படி இந்த மாதிரியான சண்டைக்கு அவசியமே இல்லை. அப்படியிருந்தும் இம்மாதிரி சகிக்க முடியாத காட்சிகளைப் புகுத்துவதின் அர்த்தம்தான் என்ன! இரண்டாவது படமான "மணமகளி"லோ மேலும் ஒரு படி கீழ்த் தரமாகவே போய் விடுகிறது. லலிதாவும், மதுரமும் கட்டிப் புரண்டு அடித்துக்கொள்ளும் கண்ணராவிக் காட்சி. இம்மாதிரிக் காட்சிகளை எடுக்க வேண்டுமென்று தோன்றியதற்காக சம்பந்தப்பட்டவர்களின் புத்திசாலித் தன

பரந்த உலகத்தின் கண்வாழும் மக்கள்யாவரும் பலவிதமான
பழக்கத்தைக் கைக் கொண்டவர்களே. புகையிலைப் பொருட் பழக்-
-கங்களுக்கு இடம் ஏற்பட்ட அளவு இதர பழக்கங்களுக்கேற்பட்டதில்லை. நாக்கிலிட்டுச்
சுவைத்து ரசிக்கும் பொருள்கள் பலவற்றிலும், மூக்கிலிட, உணர்ச்சிதரும் மூக்குத்தூள்
எனும் பட்டணம் பொடியே முதன்மையுடையது, பற்பல தேசத்தினரும் பரிவுடன் கொள்ளும்
சிட்டிகைப்பொடி கொடுக்கும் முகமலர்ச்சியை, சித்திரத்தில்
காணுங்கள்.
N.V.S. பட்டணம்பொடியானால் எல்லாவிதத்திலும் நல்லது.
SHUNMUGAM &
N.V. ஷண்முகம் கம்பெனியார்
தபால்பெட்டி 555 வண்ணாரப் பேட்டை மதராஸ்
தந்தி: மூக்குத்தூள்



அம்மாவும், மகளும், மருமகளும் ‘சுகுமாரனை’ வழியனுப்புகிறார்கள். “அம்மா” படத்தில் லலிதா, சாந்த குமாரி, பி. எஸ். சரோஜா தோன்றும் ஒரு காட்சி.

த்தை மெச்சுவதா! அல்லது, எவ்வளவு கீழ்த்தரமாக நடிப்பதா யிருந்தாலும், அதை ஏற்றுக் கொள்ளும் நமது நடிகைகளின் புத்திசாலித்தனத்தைப் புகழ்வதா என்பதுதான் புரியாமல் இருக்கிறது. இம்மாதிரி பெண்களை இழிவு படுத்திக் காட்டுவது மிகவும் கண்டிக்கத்தக்க விஷயம். இனிமேல் வரும் படங்களிலாவது இம்மாதிரிக் காட்சிகளைப் புகுத்தாமல் இருப்பார்களா!

ஏ. ஆர். ஸ்ரீனிவாஸன்,
தியாகராய நகர்.

கற்பனையில் ஓட்டைகள்

“ஓர் இரவு” படத்தில், கருணாகரத் தேவர் தம் மகள் டாக்டர் சேகருடன் தனியாகத் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த போதெல்லாம் “கம்” மென்று வாயை மூடிக் கொண்டிருந்தார். தம் மகளுடைய கற்பைப் பற்றிக் கொஞ்சம் கூட கவலைப்பட வில்லை. ஆனால், அந்த ‘ஓரிரவி’ல் மாத்திரம் ரத்னத்துடன், அவளைத் தனியாகப் பார்த்த பொழுது உடனே விபசாரி எனக் கூறத் துணிந்து விடுகிறார். இது ஒரு ஓட்டை. அண்ணாத்துரையின் வசனத்தின் விறுவிறுப்பு இப் படத்தில் ரொம்பவும் குறைந்து விட்டது. காதல், ‘மாளிகைகளில் அளிக்கப்படும் மது’ என்று ஒரு சம்பாஷணை இருக்கிறது. வயலில் வேலை செய்யும் குப்பனுக்கும், கருப்பாயிக்கும் ஆசை ஏற்பட்டால் அது காதல் இல்லையா? அவர்கள் ஏழை என்பதற்காகக் காதலின் மஹிமை போய்விடுமா! பட்டணங்களில் மாளிகைகளிலும், மெடிகல் காலேஜுகளிலும் ஏற்படுவது தான் காதல்; குடிசைகளில் ஏற்படுவது காதல் இல்லை என்பது அவர் அபிப்பிராயமா! இது மற்றொரு ஓட்டை.

வி. சந்தானம், ஹைதராபாத்.

யூகோஸ்லேவிய சினிமா

நாம் முதன் முதலாக இந்தியாவில் பிலிம் திருவிழாவை சென்ற மாதத்தில் கொண்டாடினோம். இம்மாதத்திலும் நடத்துகிறோம். பிலிம் விழாவை ஏற்கனவே நடத்தி பிரசித்தியடைந்த நாடுகள் பின வருமாறு:—பிரான்ஸ், பெல்ஜியம், இடாலி, இங்கிலாந்து. அப்படிப்பட்ட பிலிம் விழாக்களுக்கு அவர்களுடைய படங்களை அனுப்பிய தேசங்களில் மிகவும் ஆரம்ப திசையில் உள்ளது—பிலிம் தயாரிப்பு அனுபவத்தில் பார்க்கும் பொழுது—யூகோஸ்லேவியா தான். என்று கூற வேண்டும்.

பெல்கிரேட் நகர சுற்று வட்டாரங்களில் எழுநூறு ஏகர்களுக்கு மேலான விஸ்தீர்ணமுள்ள பிரதேசத்தில் ஒரு சினிமா நகர் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது. அதி நூதனமான சாதனங்கள், இயந்திரங்கள், சினிமா தயாரிப்புக்கு வேண்டிய பொருள்கள் இந்த நகரில் இடம் பெற்றிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, பிலிம் தயாரிப்பில் முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளின் மாறுபட்ட அனுபவங்கள் இங்கு உபயோகப்படுத்திக்கொள்ளப் படுகின்றன. அவைகள் யூகோவின் பெரிய சினிமா நகரின் திட்டங்களுக்கும் விஸ்தரிப்பிற்கும் உபயோகப்படுத்தப் படுகின்றன.

டெக்னிஷியன்கள், நடிகர்கள், டைரெக்டர்கள், கதை வசன கர்த்தாக்கள் முதலானவர்களின் பூராப் பயிற்சிகளுக்காக பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. தகுதியான ஆண்களும் பெண்களும், சினிமாப் படிப்பின் உயர்தர பள்ளிக் கூடத்திலிருந்தும், பிலிம் டெக்னிகல் பள்ளிகளிலிருந்தும் ஏராளமாக வருகின்றனர். அவர்கள் ஸ்டுடியோக்களிலும் சினிமா கேந்திரங்களிலும் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.

பழைய யூகோஸ்லேவியாவில் படத் தயாரிப்புகள் கிடையாது. சுற்றுப்புற ஊர்களில் சினிமா தியேட்டர்களும் கிடையாது. புது யூகோவில், இரண்டாம் உலக யுத்த காலத்திற்கு முன்பு நானூற்று நாற்பது தியேட்டர்களும், இப்பொழுது எண்ணூறு சினிமா தியேட்டர்களும் உள்ளன. இந்த எண்ணூறு தியேட்டர்களில், கிராமாந்திரப் பிரதேசங்களில் உள்ள தியேட்டர்களின் மொத்த எண்ணிக்கை, நகரங்களில் உள்ள தியேட்டர்களின் எண்ணிக்கையைப்போல் இருமடங்கு உள்ளது. இன்று, யூகோஸ்லேவியாவின் சினிமாப் படங்களை தேச ஜனத் தொகையில் எழுபது மிலியன் பேர்கள் காணுகின்றனர். ஆனால் 1945-ம் வருஷத்தில் 30 மிலியன் ஜனங்கள் மட்டுமே பார்த்தனர்.

சென்ற ஐந்து வருஷங்களில் இந்த தேசம் தயாரித்து வெளிவந்துள்ள படங்களில், பதினைந்து பொழுது போக்குப் படங்கள், நூற்றுத் தொண்ணூற்றிரண்டு டாக்குமெண்டரி படங்கள், நாற்பது புத்தி புகட்டும் படங்களும், நூற்றுக்கு மேலான மாதாந்திர பிலிம் விமர்சனங்களும், கார்ட்டூன்களும் அடங்கிய சிறிய படங்களும், பொம்மைகளைப் பாத்திரங்களாகக் கொண்ட படங்களும் இடம் பெறுகின்றன. இவைகளில் கிராமங்களுக்கு அனுப்பப் பெறும் 16 மில்லிமீடர் அளவுள்ள படங்கள் சேர்க்கப்படவில்லை. சினிமா தியேட்டர்கள் மட்டும் இவைகளைக் காண்பிக்கவில்லை. சோஷலிஸ்டு யூகோஸ்லேவியக் குடியரசின் மக்களுக்காக டூரிங் சினிமாக்கள் எல்லாவிடங்களுக்கும் எடுத்துச செல்லுகின்றன. இந்தத் தயாரிப்புகளில் சில அகில உலக விழாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவைகள் சிறந்தவை எனப் பாராட்டப்படுகின்றன. இது சிறிய தேச பிலிம் தயாரிப்புக்கு ஒரு கௌரவமே.

நம்முடைய தேச பிலிம் தயாரிப்பின் முன்னேற்றத்தில் சிரத்தையுள்ளோர்களுக்கு, யூகோஸ்லேவியாவின் சினிமாத் தொழில் பற்றிய இந்தக் கதை ஒரு தூண்டுகோலாயிருக்கும். முக்கியமாக ஒருவர் இவ்விஷயத்தில் ஊன்றிப் பார்த்து ஆராய்ச்சி செய்தால், ஐந்து வருஷங்களுக்கு முன்பு அங்கு சினிமாத் தயாரிப்பு எல்லாம் காகித திட்டங்களாகவே யிருந்தன, ஆனால், இன்று சுறுசுறுப்புடன் தயாரிப்புகள் நடைபெறுகின்றன என்பதை அறியலாம். அது குழந்தைப் பருவத்திலுள்ள யூகோ சினிமாத் தொழிலுக்குப் பெருமைதரக் கூடிய விஷயம்.

—"ஸண்டே டைம்ஸ்"

B4132

குறைந்த விலையில் - -
- - சிறந்த நாவல்கள்!

இயற்கை எழில் கொழிக்கும் கேரளத்தில் கட்டழகி கல்யாணியின் சொக்கழகிலே காதல் கலை பயின்ற கன்னித் தமிழ் இளைஞனின் திடுக்கிடும் சம்பவங்கள் பல நிறைந்த சுவை மிக்க வரலாறு.

குமாரி குமுதம் எழுதிய

கேரளத்துக் கட்டழகி

கண்ணையும் கருத்தையும் கவரும் அழகிய மூவர்ண மேலட்டை

விலை ரூபாய் ஒன்று

"காம விடாயைத் தீர்க்கும் சோடா அல்ல பெண்" என்பதை நிரூபித்துக் காட்டிய ஒரு லட்சியப் பெண்ணின் அருமையான காதல் கதை.

பிரபல நாவலாசிரியர்!
எஸ். தேவராஜ் எழுதிய

ஓர் இரவு நாடகம்

அழகிய மூவர்ண அட்டை

விலை அணா எட்டு

மனைவியின் காதலன்	எஸ். கே. சாமி
இன்ப வேட்டை	"இந்திரா"
லலிதாவின் காதலன்	செல்வன்
காமாந்தகாரி	சஞ்சீவி

ஒவ்வொன்றும் அணா எட்டு

முன்பணம் அனுப்புவோருக்கு மட்டும் தபால் செலவு இனாம். வியாபாரிகளுக்கு கமிஷன் 25% உண்டு.

—: விபரங்களுக்கு :—

லைப் பப்ளிகேஷன்ஸ்

பிரசன்ன விநாயகர் கோவில் தெரு
மயிலாப்பூர் :: சென்னை—4.

புஸ்தகப் பொழுது

தளபதி

[ஆசிரியர்: வி. எஸ். வீரநாதக் கோனர்; விலை: ரூ. 1-8-0; கிடைக்குமிடம்: கலா மன்றம், அம்பலத்தாடி, குமாரம் போஸ்டு, மதுரை.]

சரித்திர நாடகம் போல் ஆசிரியரால் எழுதப் பட்டுள்ள கற்பனை நாடகம் இது. வீர வாளையும், வீர வனிதை சந்திராவையும் அடைய இரு தளபதிகளிடையே ஏற்படும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் பட்டுள்ள நாடகம். சம்பாஷணைகள் விறுவிறுப்பாக இருக்கின்றன. நடிப்பதற்கு ஏற்ற நாடகம் இது.

மஞ்சுளா

[ஆசிரியர்கள்: ஆர். எஸ்.மணி, ஸம்பத்குமார்; விலை: ரூ. 1-4-0; கிடைக்குமிடம்: ஞானமணிப் பிரசுரம், சென்னை-17]

இதைத் துப்பறியும் நாவல் என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால் குற்றவாளியாக வந்து மாட்டிக் கொள்வதாகவும், துப்பறியும் நிபுணர் பல சந்தர்ப்பங்களில் ஏமாறுவதுமாகவே கதைப் போக்கு அமைந்திருக்கிறது. கதை முடிய, வேண்டுமென்றே குற்றவாளி வந்து சிக்கிக் கொள்வதாக முடித்திருப்பது கொஞ்சங் கூட ரஸமாக இல்லை. துப்பறியும் கதைகளுக்கு வேண்டிய விறு விறுப்பான நடையும் இல்லை.

மிராசுதார்

[ஆசிரியர்: பி. எக்ஸ். ரங்கசாமி: கிடைக்குமிடம்: காலேஜ் புக் ஸ்டால், 57, ஹைரோடு, திருநெல்வேலி சந்திப்பு; விலை: ரூ.1-0-0]

மோகனா தன் அத்தான் சேகரைக் காதலிக்கிறாள்; சேகரோ, வேலைக்காரியின் மகள் புஷ்பாவை நேசிக்கிறான். மனித மிருகமான மிராசுதார் சுந்தரம் பிள்ளையின் அக்கிரமச் செயல்கள் தாண்டவ மாடுகின்றன. இறுதியில், புஷ்பா மோகனாவை சேகர் அங்கிகரிக்கும்படி செய்கிறாள். புரட்சிகரமான பல கருத்துக்களைக் கொண்டு பின்னப் பட்டுள்ள நாடகம் இது. கவர்ச்சிகரமான அட்டையுடன் வெளி வந்திருக்கிறது.

வாடாமலர்

[ஆசிரியர்: "மாயாவி"; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட்., சென்னை 18; விலை: ரூ 3-8-0.]

படிக்கும் போது அலுப்பே தட்டாமல் சுவாரஸ்யம் நம்மை உந்திக் கொண்டே இருக்கும்படி எழுதும் திறமை ஒரு சிலருக்குத்தான் உண்டு. "மாயாவி" அத்தகைய ஒரு எழுத்தாளர் என்பதற்கு அவர் எழுதியுள்ள இந்த நாவல் ஒரு எடுத்துக்காட்டு. இந்த நாவலில் வரும் கதா பாத்திரங்கள் அனைவருக்குமே ஒவ்வொரு மலரின் பெயரைக் கொடுத்திருப்பதும், நான்கு பாகங்களில் உள்ள அத்தியாயங்கள் ஒவ்வொன்றுக்கும் தொடர்ச்சியான தலைப்புக் கொடுத்திருப்பதும் நூதனமாக இருக்கின்றன. வாடா மலரான மல்லிகாதான் முல்லை நாதரின் சொந்தப் பெண் என்பதை கடைசி வரை வாசகர்கள் முன் கூட்டியே அறிந்துவிட முடியாதபடி கதையைக் கொண்டு போயிருப்பது ரொம்பப் பிரமாதம். வாசித்து ரஸிக்க வேண்டிய ஒரு சிறப்பான நாவலாகும் வாடா மலர்.

நிலா சிரித்தது

[ஆசிரியர்: 'ஆர்வி'; கிடைக்குமிடம்: அமுத நிலையம் லிட், சென்னை-18; விலை: 8 அணா.]

இது ஒரு நீண்ட சிறு கதை. பல குணங்களைக் கொண்ட கதா பாத்திரங்களைக் கொண்டு பின்னப்பட்ட கதைப் போக்கு சுவாரஸ்யமாக இருக்கிறது. எளிய நடையில் கதையை விறு விறுப்பாகக் கொண்டு போயிருக்கிறார் ஆசிரியர்.

JOURNAL OF THE CINE TECHNICIANS

சென்னையிலுள்ள ஸினி டெக்னிஷியன்கள் சங்கம், மாதம் ஒரு முறை Journal of the Cine Technicians என்ற பெயரில் ஒரு பத்திரிகையை வெளியிட்டு வருகிறது. இதில் சினிமாத் தொழிலின் முக்கிய நிகழ்ச்சி

பற்றிய குறிப்பு, அவைகள் சம்பந்தமான போட்டோக்கள், படத் துறையில் சம்பந்தப்பட்ட பல்வேறு பிரமுகர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் யாவும் அடங்கியுள்ளன.

சமுதாய நிழல்

[ஆசிரியர்: சொ. சிதம்பரம்; கிடைக்குமிடம: ஔவை நிலையம், 274, மாதாக் கோயில் வீதி, காரைக்கால்; விலை ரூ 2]

முதலாளித்துவ அமைப்பு எந்தப் பக்கத்திலிருந்தாலும் அங்கு விபசாரம் இருந்துதான் தீரும்; பணக்காரன் கைப் பதுமை அரசாங்கம்—என்ற தமது கருத்துக்களை மனதில் கொண்டு இந்த நாடகத்தை எழுதியிருக்கிறுர் ஆசிரியர். விலை மகளின் பரம்பரையில் வந்த ஒருவனிதை குலத் தொழிலை வெறுத்து குடும்பப் பெண்ணுவதாக உள்ளது கதைப் போக்கு. இந்த நாடகத்திற்கு 'பாரதிதாஸன்' முகவுரை அளித்திருக்கிறுர்.

ஆசை நாயகி

[ஆசிரியர் : ஆர். எஸ். மணி; விலை : அணு 12; கிடைக்குமிடம்: கன்னிகா பதிப்பகம், சென்னை-14]

பச்சைபாக எழுதப்பட்டு வெளிவரும் புத்தகங்களில் 'ஆசை நாயகி' யும் ஒன்று. எந்தவிதத்திலும் இந்தப் புத்தகத்தை உயர்வாகச் சொல்வதற்கில்லை. ஆமைவேகத்திலே செல்லும் நடையில், கொள்ளை, கொலை நிகழ்ச்சிகளைப் புகுத்திக் குளறுபடியாகக் கதையைப் பின்னியிருக்கிறுர் ஆசிரியர். கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் புஸ்தகம் அச்சாகியிருக்கிறது.

வாழ்க்கையில் வெற்றி

[ஆசிரியர் : எம். ஆர். எம் அபதுல் ரஹிம், பி.ஏ.]

"தெய்வத்தாலாகா தெனினும் முயற்சிதான் மெய்
வருந்தக் கூலிதரும்"

என்ற வள்ளுவர் வாக்கின் படி வரையப்பட்டுள்ளது. இப் புத்தகம். மனித வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் அவனுடைய தன் நம்பிக்கைதான் காரணம் என எடுத்துரைக்கிறுர் இதன் ஆசிரியர். சிறுவரும் பெரியவரும் வயோதிகரும்கூட தாம் எடுத்த காரியத்தைச் சாதிக்க தன் நம்பிக்கையும் விடா முயற்சியும்தான் காரணம்—காலமாவது, அதிர்ஷ்டமாவது அல்ல என விளக்குகிறுர். அதற்குத் தக்க சான்ருக அயல நாட்டு, நம்நாட்டு பெரியார்களும் எழுத்தாளர்களுமே என, ஒவ்வொருவருடைய ஆரம்ப வாழ்க்கையையும் அவர்கள் அடைந்த அல்லலையும் அவசியமான அளவுக்குக் குறிப்பிட்டுக் கொண்டு செல்கிறுர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிகலபமாகவும் அதிசீக்கிரமாகவும் நலமுடன் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 200.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

ஏஜெண்ட்: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

பிராஞ்ச்: 134, SERANGOON ROAD, சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES, 62. MAIN ST., கொழும்பு-11

குமாரி நளினி

வஸந்தன்

அந்தப் பெரிய ஸ்டுடியோவுக்குள் வெறும் நீலாவாகச் சென்றவள், ஒரு மணி நேரங் கழித்துத் திரும்பி வரும்போது குமாரி நளினி தேவியாகத் திரும்பிவந்தாள். உள்ளே போகும்போது அவள் துயரமே உருவான ஏழைப் பட்டிக்காட்டுப் பெண். ஆனால் அந்த ஸ்டுடியோவை விட்டு வெளி வரும்போதோ, நவ நாகரீகத்தின் உருவான, குதூகலம் குடிகொண்ட குமாரி நளினி. ஸ்டுடியோ முதலாளியான ஸ்ரீ முனிரத்னம் நாயுடு சற்று முன் ஸ்டுடியோவில் தம் அறைக்குள் நுழையும் போதே, வராந்தாவில் தமக்காகக் காத்துக் கொண்டிருந்த எத்தனையோ விண்ணப்பதாரர்களைக் கண்ணோட்டிக் கொண்டே போனார். ஒரு மூலையில் பயத்தாலும் வெட்கத்தாலும் உடல் குன்றி நின்று கொண்டிருந்த நீலாவைப் பார்த்ததும், அவர் பார்வை அவள் மீது சில வினாடிகள் நிலைத்து நின்று விட்டது. தம் அறைக்குள் நுழைந்ததும் அந்தப் பெண்ணை அழைத்து வரச் சொன்னார். நீலாவின் அகன்ற பெரிய கரு விழிகளும், எடுப்பான நாசியும் யௌவனத்தின் எழில் பொங்கிய பொழிவும் அவள் தேகக் கட்டும் முனிரத்தினத்தையே திகைக்கச் செய்து விட்டன. அவர் நீலாவைப் பேசச் சொன்னார்; பாடச் சொன்னார். 'மேக்-அப்' செய்து போட்டோ பிடிக்கச் சொன்னார். மாதம் இருநூறு ரூபாய் சம்பளத்தில் ஒரு நடிகையாக அவளுடன் மூன்று வருஷங்களுக்கு ஓர் ஒப்பந்தமும் செய்து கொண்டார்.

நீலாவுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவளுடன் வந்திருந்த அவள் தாயார் மூர்ச்சை போட்டுக் கீழே விழாமல் தப்பியதும் ஒரு ஆச்சரியம். "நீலா என்ற பெயர் கர்நாடகமாக இருக்கிறது. இனிமேல் நளினி தேவி என்ற பெயர் தான் உனக்கு" என்று கட்டளையிட்டார் முனிரத்னம். அந்த நிமிஷத்திலிருந்து நீலா, நளினி தேவியாக மாறினாள்.

நளினி தேவி தனக்கு ஏற்பட்ட அதிருஷ்டத்தை நினைத்து உள்ளம் பூரித்தாள். சில தினங்களுக்கு முன் தந்தையை இழந்து நிர்க்கதியாகப் பட்டணத்துக்கு வந்த அவள் தனக்கு இவ்வளவு பெரிய அதிருஷ்டம் காத்திருக்கும் என்று எதிர் பார்க்கவில்லை.

ஸ்டுடியோவின் படிக்கட்டுக்களைத் தாண்டி சாலைக்கு வந்தாள். அவள் வரவை எதிர்பார்த்துத் தயாராகக் காத்திருந்தான் நமச்சிவாயம். நளினியைப் பார்த்த அவன், முகத்தில் புன்னகை தவழ "உங்களுக்கு எங்கே போக வேண்

டும்! நானே என் காரில் கொண்டு வந்து விடுகிறேனே!" என்றான். அவனைப் பார்த்ததுமே என்ன காரணத்தினாலோ நளினியின் மனதில் இருந்த அத்தனை சந்தோஷமும் மறைந்தது. அதற்குப் பதில் விவரிக்க முடியாத வெறுப்பும் கோபமும்தான் உண்டாயின.

"வேண்டாம், ஐயா! நாங்கள் பஸ்ஸில் வீட்டுக்குப் போகிறோம்!" என்று 'வெடுக்'கென்று பதிலளித்து விட்டு, மேலே நடந்தாள். அவன் ஸ்டுடியோவில் சம்பந்தப்பட்ட யாரோ ஒரு சிப்பந்தி என்பதை மட்டும் அவள் ஊகித்துக் கொண்டாளே யொழிய, தன்னுடன் பேசியது ஒரு நட்சத்திர நடிகன் என்பதையும், ஜூனிரத்தினத்தின் அறையிலும், 'மேக்-அப்' ரூமிலும், போட்டோப் பிடிக்கும் பொழுதும் அவன் நிழல் போல் தன்னைச் சுற்றிக் கொண்டிருந்ததும் தன் அழகை இரு கண்களாலும் அவன் பருகிக் கொண்டிருந்ததும் அவளுக்கு எப்படித் தெரியும்!

நாம் சிலரை முதன் முதலாகப் பார்க்கும் பொழுது காரணந் தெரியாத ஒரு வெறுப்பு அவர்களிடம் ஏற்படுகிறது! அவ்விதமே சிலரை நாம் முதன் முதலாகச் சந்தித்ததுமே, நாம் ஏன் அவர்களை நேசிக்கிறோம் என்பது தெரியாமல் அவர்களை நேசிக்க ஆரம்பிக்கிறோம். இந்த விதிக்கு நளினி மட்டும் விலக்கல்ல. நமச்சிவாயத்தை முதன் முதலாகப் பார்த்ததுமே, நஞ்சைப் போல் அவனை வெறுக்கத் தொடங்கினாள் அவள். நமச்சிவாயம் ஒரு மாதிரியாக அவளைப் பார்த்துவிட்டு காரை விட்டுக்கொண்டு போய்விட்டான். நமச்சிவாயம் நல்ல உயரம். தீட்சண்யமான கண்களும், கம்பீரத் தோற்றமும் அமைந்த இளைஞன். முகத்தில் ஒரு குறும்புப் புன்னகை தவழ்ந்தது. அவன் 'டிப் டாப்'பான டிரஸ் யாரையும் ஒரு தடவைக்கு இரண்டு தடவை அவனைக் கவனிக்கத் தூண்டும். இவ்வளவு கவர்ச்சியும் இருந்தும், அவனைக் கண்டதும் நளினி வெறுப்புக் கொண்டாள் என்றால், அதை விதி என்பதைத் தவிர வேறு என்னவென்று சொல்ல முடியும்?

நளினியும் அவள் தாயாரும் பஸ் ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு பஸ்ஸுக்காக ஒரு வாலிபன் காத்திருப்பதைப் பார்த்தார்கள். முதன் முதலாக அந்த வாலிபனைப் பார்த்ததும், ஒரு கணம் தன்னையும் மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் நளினி. அந்த வாலிபன் அகஸ்மாத்தாகத் திரும்பி நளினியைப் பார்த்தான். இருவர் கண்

களும் சந்தித்துக் கொண்டன. அவளு டல் 'குப்'பென்று வியர்த்தது. முகம் சிவந்தது. சட்டென்று அவள் சமாளித்துக் கொண்டு தன் நடத்தைக்காக வெட்கம் கொண்டவளாய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். அந்த வாலிபனுக்கு இருபத்தைந்து வயதுக்குள் இருக்கும். தெருவில் நாம் பார்க்கும் சாதாரண வாலிபர்களைப் போலவே நம் கண்களுக்குத் தோன்றினன். ஆனல் நளினிக்கு அவன் அபபடித் தோன்றவில்லை. நளினியின் கண்களுக்கு, இதிகாச புராணங்களிலுள்ள வீரனைப் போலவும் காதல் நவீனங்களில் வரும் லட்சியக் கதாநாயகனுகவும் அவன் தோன்றினுன் என்ருல், விதி என்பதைத் தவிர அதற்கு வேறு என்ன காரணம் சொல்ல முடியும்!

நளினி வேறொரு பக்கம் பார்ப்பது போல் பாசாங்கு செய்து கொண்டிருந்தாளே தவிர அடிக்கடி அவள் கண்கள் அந்த வாலிப்னின் பார்வையைச் சந்தித்துத் திரும்பிக் கொண்டிருந்தன. ஆனல், அந்த வாலிபனே அவ்விதம் பாசாங்கு செய்யாமல் கற்சிலைபோல் நின்று நளினியையே பார்த்துக்கொண்டிருந்தான். ஒரு மணி நேரம் ஆயிற்று. அந்த வாலிபன் ஏதோ தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவனைப் போல், "அடடா, எத்தனை நேரமாக இங்கே நிற்கிறீர்கள்! இந்த பஸ்ஸை நம்பினல் இந்த

கதிதான்!" என்ருன். நளினி அவனைப் பார்த்துப் புன்னகை மட்டும் செய்தாள். அவன் எதிர்பார்த்தபடி சம்பாஷணையில் கலந்து கொள்ளவில்லை. சிறிது நேரம் கழித்து அவன், "மோட்டாரை ரிப்பேர் செய்யக் கொடுத்து இரண்டு நாளாகப் போகிறது! இன்னும் 'ரிபேர்' முடியவில்லை. ஸ்டுடியோக் காரையாவது எடுத்துக்கொண்டு வரலாம் என்ருல் அதுவும் ரிபேர்!" என்ருன்.

நளினி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"நீங்கள் ஸ்டுடியோவில் வேலை செய்கிறீர்களா?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம். இரண்டு வருஷமாக நான் இங்கே இருக்கிறேன்!"

"உங்கள் பெயர்!"

"குமார்."

'குமார்' என்றதும் நளினிக்குத் தூக்கிவாரிப் போட்டது. பல பிரபல சினிமாப் படங்களில் கதாநாயகனுக நடித்து ரஸிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட குமார் இவர் தானு?

இரண்டு வருஷங்களுக்கு முன் நளினியின் கிராமத்துக்கு ஒரு 'டூரிங்' சினிமா வந்திருந்தது. நளினியின் தகப்பனுர் அந்த சமயம் உயிரோடு இருந்தார். அவர் தம் மகளை சினிமாவுக்குப் போகக் கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டதால், அவள் அதைப் பார்க்க முடியவில்லை. சினிமாப் பார்த்தவிட்டு வந்த தன் சிநேகிதிகளின் விமர்சனங்களைக் கேட்பதுடன் அவள் திருப்தியடைந்தாள். அப்பொழுது 'இன்பலோகம்' என்ற படத்தைப் பற்றியும் அதில் நடித்த கதாநாயகன் குமாரைப் பற்றியும் அவள் சிநேகிதிகள் பிரமாதமாகப் புகழ்ந்

தது அவள் உள்ளத்தில் பதிந்தது. அதே குமாரை நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேம் என்பதை அவள் எப்படி எதிர் பார்த்திருக்க முடியும்?

நளினி அடைந்த ஆச்சரியத்தைப் பார்த்ததும் குமார், "என்னை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

நளினி பொய் சொல்லவில்லை. "உங்களைப் பற்றி நாங்கள் ரொம்பக் கேள்விப் பட்டிருக்கிறேம். நேரே பார்த்ததில் ரொம்ப சந்தோஷம்.... நானும் இந்த ஸ்டுடியோவில் சேர்ந்திருக்கிறேன். சற்று முன்தான் சேர்ந்தேன்!" என்ருள்.

"நீங்கள் இந்த ஸ்டுடியோவில் சேர்ந்திருப்பது எனக்கும் தெரியும். இப்பொழுது ஆரம்பிக்கப் போகும் படத்தில் உங்களுக்கு முக்கியமானதொரு பாகம் கொடுக்க உத்தேசித்துக் கொண்டிருக்கிருர்கள்!" என்ருன் குமார்.

"எனக்கு நடிப்பதில் அனுபவமே இல்லை" என்ருள் நளினி.

"சினிமாவில் முதன் முதலில் 'ஆக்ட்' பண்ணுகிறவர்களுக்கே அனுபவம் கிடையாதுதான். நடிக்க நடிக்கத்தானே அனுபவம் வருகிறது' ஆமாம் உங்கள் ஜாகை எங்கே?" என்று விசாரித்தான் குமார்.

"என் தாய் மாமன் சைதாப்பேட்டையில் இருக்கிருர். அவர் வீட்டில்தான் தங்கியிருக்கிறேம்."

அதற்குள் பஸ் வந்து விட்டது; மூவரும் ஏறிக்கொண்டார்கள். முதல் சந்திப்பிலேயே குமாரும் நளினியும் ஒருவரையொருவர் நேசிக்க ஆரம்பித்தனர்.

● ● ●

"மாமன் மகள்" என்ற படத்தில் குமார் கதாநாயகன். நளினியே கதாநாயகி. நளினியின் முகவெட்டு, நடையழகு, புன்சிரிப்பு இவற்றையெல்லாம் பார்த்து "பலே, பலே!" என்று சொல்லாதவர்கள் யாரும் இல்லை. ஆனல், சாதாரண படிப்புகூட இல்லாத பட்டிக்காட்டுப் பெண்ணுக்கு சரியாகப் பேசத் தெரியுமா? உணர்ச்சியுடன் நடிக்கத் தெரியுமா என்ற சந்தேகமும் முதல் நாள் ஒத்திகையிலேயே தீர்ந்துவிட்டது.

கோகுல்
ஹேர் ஆயில்

டி.எஸ்.ஆர்
..... தயாரிப்பு.....
டி.எஸ்.ஆர். & கோ.
...கும்பகோணம்...

ஜானகி

விஜயா புரொடக்ஷன்ஸாரின் "சௌகார்" தெலுங்
குப் படத்தின் மூலம் புகழ் பெற்ற ஜானகி.

சர்வ தேச பிலீம் விழா
வில் காட்டப்பட்ட
பெருமை பெற்றுள்ள
"பாதாள பைரவி"
படத்தில் கதாநாயகி
யாய் நடித்துள்ள
பெருமை கே. மாலதி
யைச் சேருகிறது.

அவள் நடிப்பைப் பார்த்து, 'தமிழ் சினிமா வானில் ஒப்பற்ற தாரகை தோன்றினுள்' என்று ஸ்டுடியோவில் எல்லோரும் அபிப்பிராயப்பட்டார்கள். 'முனிரத்னம் நாயுடுவின் அதிருஷ்டமே அதிருஷ்டம்?' என்று புகழ்ந்தார்கள். கஞ்சத் தனத்தில் பிரசித்தி பெற்ற முதலாளி கூட பழைய கண்டிராக்டை ரத்து செய்து, நளினியின் சம்பளத்தை இருநூறிலிருந்து இருநூற்று இருபதாக உயர்த்திப் புது ஒப்பந்தம் செய்து கொண்டார்.

நளினி அவ்வளவு உத்சாகத்துடன் நடிக்கத் தொடங்கியதற்குக் காரணம் சம்பள உயர்வுதான் என்று முனிரத்னம் நினைத்த போதிலும், உண்மைக் காரணம் வேறு. அவள் குமாருடன் சேர்ந்து நடிப்பதில் அளவற்ற ஆனந்தம் கொண்டதுதான் உண்மைக் காரணம். அவள் குமாரிடம் சொல்லத் துடிதுடித்த உணர்ச்சிகளைக் கதாநாயகியின் வாய் மொழியாகத் தெரிவித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. குமார் கதாநாயகன் வேஷம் தாங்கிக் கூறும் இனப மொழிகளைக் கேட்கும் போதெல்லாம் அவைகளைப் படத்தின் சம்பாஷணையாகவே அவள் கருதவில்லை. அவள் உண்மையான காதல் மொழியாகவே நினைத்தாள். அவள் படத்தில் நடித்தபோது படத்தில் காதலியாகமட்டும் நடிக்காமல் உண்மைக் காதலியாகவே வாழ்ந்தாள். சிருங்கார கட்டங்களில் உண்மையாகக் காதலித்தது போலவே, கதாநாயகனுக்கு ஆபத்து ஏற்படும்போது உண்மையாகவே வருந்தினுள். அவன் வெளியில் சென்றிருந்த கட்டத்தில் பிரிவாற்றுமை தாங்காமல் உண்மையாகவே துடிதுடித்தாள்.

நளினி, குமாருடன் தோன்றும் முக்கிய கட்டங்களில் அவள் நடிப்பைப் பார்த்து ஸ்டுடியோ சிப்பந்திகள் 'சபாஷ்' போட்டார்கள் என்றுல், அவள் நமச்சிவாயத்துடன் தோன்றும் கட்டங்களில் 'பலே பலே சபாஷ்!' என்று ஆச்சரியப்பட்டனர். ஏனெனில் அவள் ஆரம்பத்தில் கண்டு மனமார வெறுத்த நமசிவாயம் அந்தப் படத்தில் 'வில்லனுக' நடித்தான். அவள் மனதில் குடிகொண்டிருந்த இயற்கையான வெறுப்பு சினிமா சம்பாஷணையாக வெளி வந்தது; "சீ! நீயும் ஒரு மனிதனு? வெளியில் போகிறுயா, இல்லையா?" என்று கதாநாயகி வில்லனைக் கடிந்து கொள்ளும் இடத்தில் 'பிளாஷ் கூட்' போடும் வேலைக்காரர்கள்கூட மெய்மறந்து கைதட்டி ஆரவாரம் செய்தார்கள் என்றுல், கதாநாயகியின் பேச்சில் எவ்வளவு வெறுப்பும் ஆத்திரமும் இருந்திருக்க வேண்டும்! இவ்வாறு நளினி நடிக்கும்போது உண்மையாகவே அவள் இதயம் பேசியதால், அவள் நடிப்பு ஒப்பற்று விளங்கியது.

அந்த சினிமாப் படம் வெளி வந்ததும் தமிழ் நாடே பிரமித்துப் போய் விட்டது. "நளினியைப் போன்ற சிறந்த நடி இதுவரை வந்ததும் இல்லை; இனிமேல் வரப் போவதும் இல்லை" என்று விமர்சகர்களும், ரஸிகர்களும் ஒரு முகமாக அபிப்பிராயப் பட்டார்கள். அடுத்தடுத்து நளினியும் குமாரும், வில்லன் நமசிவாயமும் நடித்த படங்கள் சில வெளி வந்தன. எல்லாப் படங்களுக்கும் பிரமாத வசூல். முனிரத்னம் நாயுடு தமிழ்ப் பட முதலாளிகளின் முன்னணியில் நின்றுர்.

அப்பொழுதெல்லாம் நளினியும் குமாரும் அடிக்கடி சந்தித்துக் கொள்வார்கள். நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். நயன பாஷைகளால் தங்கள் உண்மைக் காதலைத் தெரியப் படுத்திக் கொள்வார்களே தவிர, வாய் திறந்து சொல்ல மாட்டார்கள். நளினி கிராமத்தில் பிறந்து வளர்ந்த கண்ணியமான குடும்பத்துப் பெண். சங்கோஜி. தன் எண்ணத்தை வாய் திறந்து சொல்லக் கூசினுள். நளினி பரிசுத்தமானவள் என்பது குமாருக்குத் தெரியும். தன் எண்ணத்தை வெளியிட்டு அதனுல் அவள் நட்பையே இழக்கும்படி நேர்ந்து விட்டால் என்ன செய்வது என்றும் அவன் பயந்தான்.

இப்படியாக இரண்டு வருஷங்கள் சென்று விட்டன.—ஆவலும் பரபரப்பும், ஏக்கமும், திகைப்பும் நிரம்பிய இரண்டு வருஷங்கள்! இவ்விரு காதல் ஜோடிகள் சேர்ந்து நடித்த நாலாவது சினிமாப் படம் திரையிடப்பட்டு விட்டது. ஐந்தாவது படத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அப்பொழுது தான் எதிர் பாராதது நடந்தது.

ஒரு நாள் ஸ்டுடியோவிலிருந்து திரும்பிய குமார் தலைவலி என்று சொல்லிக்

கொண்டு வீட்டுக்கு வந்து படுத்தான். அவனைப் பரிசோதித்த டாக்டர் ஹிருதய வியாதி ஏற்பட்டிருப்பதாகவும் சில மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொல்லி விட்டார். சிறு வயதிலிருந்து அவனை வளர்த்து வந்த அத்தை இதைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனாள். அத்தை பழங் காலத்து மனுஷி. இருதய நோயின் உண்மைக் காரணத்தை அவளால் ஊகித்து அறியவும் முடியவில்லை. என்ன செய்வதென்று தவியாய்த் தவித்தாள்.

குமாரின் உடம்பு அசௌகரியத்தைக் கேள்விப்பட்ட உடனேயே நளினி அடைந்த துன்பத்தை எப்படி விவரிக்க முடியும்? அவனது உடல் நிலைக்குக் காரணம் தானேதான் என்று அவள் உள்ளுணர்வு அறிவித்தது. பிரதிதினமும் அவள் ஸ்டுடியோவில் வேலை முடிந்ததும் குமாரின் வீட்டுக்குப் போவாள். அவனுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிப் போவாள். அவன் அருகில் கற்சிலையாய் துயரமே உருவாக உட்கார்ந்து கொண்டிருப்பாள். "என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விருப்பமா?" என்ற கேள்வி எப்பொழுது குமாரிடமிருந்து வெளிவரும் என்று ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்தாள். ஆனால்,... அந்த வார்த்தைகள் ஏனோ குமாரிடமிருந்து வெளி வரவில்லை! நளினி தன் கருத்தைச் சொல்லப் பலதடவைகள் முயற்சி செய்தும் தொண்டை அடைத்துக் கொண்டது.

பிரதம நடிகன் குமாரின் உடல் நலக் குறைவினால் புதுப் படத்தில் அவன் நடிக்க முடியவில்லை. வில்லன் வேஷம் தாங்கிய நமசிவாயத்தையே கதாநாயகனாக நடிக்க ஏற்பாடு செய்தார்கள்! நளினி இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள், வில்லன் நமசிவாயம் கதாநாயகனா?— அதை அவளால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. ஆனால், 'நடிக்க முடியாது' என்று அவளால் மறுதளிக்க முடியுமா!

ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கும் போது நளினியின் நடிப்பைப் பார்த்து ஸ்டுடியோவில் உள்ளவர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். நமசிவாயத்தைத் தொடவே நளினியின் கை கூசியது. முகம் மலர்ந்து இனிமையுடன் சொல்ல வேண்டிய சம்பாஷணைகள் எல்லாம் துப்பாக்கியிலிருந்து வரும் குண்டுகளைப் போல் அவளிடமிருந்து வெளி வந்தன. பல தடவை ஒத்திகைகள் நடத்தி படப்பிடிப்பு நடந்தும் அவள் நடிப்பு சர்வ மோசமாகவே இருந்தது. ஏனெனில் நளினியின் இதயம் பேசவில்லை. அவள் நடிப்பு ஜீவனின்றி, உணர்ச்சியின்றி, இருந்தது. இயந்திரத்தைப் போல் நடித்தாள்; பேசினாள். 'நமசிவாயத்துடன் நடிக்கிறோம்' என்ற வெறுப்புடன் குமார் தேக அசௌகரியத்தைப் பற்றிய துக்கமும் சேர்ந்து கொண்டது. படம் வெளி வந்ததும் அது மகத்தான தோல்வி யடைந்தது. முனிரத்னமும் அதை வாங்கிய விநியோகஸ்தர்களும் தலையில் கைவைத்துக் கொண்டார்கள்.

நவசிவாயமும் நளினியும் காதல் ஜோடியாய்த்தோன்றிய அடுத்த படமும் படுதோல்வியை அடைந்தது. "நளினி தன் நடிப்புத் திறமையை அடியோடு இழந்து விட்டார்" என்றும் "அவர் கௌரவமாக சினிமாத் துறையிலிருந்து விலகி விடுவது நல்லது" என்றும் பல பத்திரிகைகள் எழுதின.

இதற்குள், நளினி சினிமா ஸ்டுடியோ முதலாளியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் முடியும் தருணம் வந்துவிட்டது. ஒரு நாள் முனிரத்னம் நளினியைக் கூப்பிட்டு, "நளினி! உனக்கு உதவி செய்ய நான் முயற்சி செய்தேன். ஆனால் நான் என்ன செய்யட்டும்! உன்னால் இரண்டு படங்களில் பத்து லக்ஷம் இழந்து விட்டேன். உன் ஒப்பந்தத்தை இனிமேல் நீடிக்க முடியவில்லை என்பதை நினைக்க எனக்கு வருத்தமாகத்தா னிருக்கிறது" என்று கையை விரித்து விட்டார். தன் வேலையும் போய் விட்டதை நினைக்க நளினிக்கு அழுகை அழுகையாக வந்தது. மூன்று வருஷமாக அவள் காலணாக் கூட மிச்சப் படுத்த முடியவில்லை. இனி அவள் கதி என்ன! குமார் செல்வந்தர். தன்னை நினைத்து ஏங்கியே அவர் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையானவர். தன் விருப்பத்தை வாய் திறந்து சொல்வதற்கு முடியாமல் அவளைச் செய்து விட்டது பாழும் சங்கோஜம். இந்தச் சமயத்தில், வேலை போன பிறகு தன் இஷ்டத்தை வெளியிட்டால் அவர் என்ன நினைப்பார்? பணத்துக்காகவும், வறுமையிலிருந்து தப்பிக் கொள்ளவும் தானே தான் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதாக நினைப்பார்! கூடாது,

கூடாது, சொல்லக் கூடாது? ஆனால் அவர் கதி? இப்படியே ஏங்கி ஏங்கி அவர் சாக வேண்டியது தானா? என்ன செய்வதென்று அறியாமல் எண்ணி எண்ணி ஏங்கினாள் நளினி. இந்தக் குழப்பத்தில் குமாரைப் பார்க்கக் கூட அவள் போகவில்லை.

அன்று காலை குமாரின் கார் அவள் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து உடல் துரும்பாய் இளைத்துப் போன குமார் இறங்கி மெதுவாய் நடந்து வந்தான்.

"ஐயோ! நீங்கள் இப்படி நடந்து வந்து எதற்காக உடம்பை அலட்டிக் கொள்கிறீர்கள்?" என்று பதறிப் போய் உள்ளேயிருந்து ஓடி வந்து அவனை வரவேற்றாள் நளினி.

"இப்பொழுது தான் நான் கேள்விப் பட்டேன்! ஸ்டுடியோவிலிருந்து உன்னைத் தள்ளி விட்டார்களாமே! அதைக் கேட்டதும் இருப்பே கொள்ள வில்லை! கவலைப் படாதே நளினி! நான் இருக்கிறேன். என்னைக் கல்யாணம் செய்து கொண்டுவிடு! என் உடம்பு உடனே குணமாகிவிடும்! புருஷனும் மனைவியுமாகி, நாமே சொந்தப் படத்தில் நடிப்போம். என்ன சொல்கிறாய்?" என்றான் ஆவேசம் வந்தவன் போல்.

அமிழ்தினும் இனிய, இதுகாறும் கேட்கத் துடித்த, அந்த வார்த்தைகளைக் கேட்டதும் மூர்ச்சை போட்டுக் கீழே விழாமல் இருக்க கெட்டியாகப் பக்கத்திலுள்ள தூணைப் பிடித்துக் கொண்டாள் நளினி.

"நிஜந்தானா? நான் பாக்கியசாலி!" என்று அவள் உதடுகள் முனகின!

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, அவர்கள் சேர்ந்து நடித்த சொந்தப் படம் வெளி வந்தது. அப்படத்தில் அவர்கள் நடிப்பைவிட அவர்கள் செல்வக் குமாரன் ஒரு வயதுக் குழந்தை சேகரின் நடிப்பே சிறந்ததென்று ரஸிகர்கள் புகழ்ந்தார்கள்!

வாழ்த்துகிறோம்

நடிகர் வி. கே. கார்த்திகேயன், இம்மாதம் 3-ம் தேதி, சௌ. வேதவல்லியைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார்.

குண்டூசி
காலண்டர்

எதிர்பாராத காரணங்களினால் எம் "குண்டூசி" காலண்டரை முன்பு அறிவித்தபடி பிப்ரவரி மாதத்தில் வெளியிடாததற்கு வருந்துகிறோம். காலண்டர் மார்ச் கடைசி வாரத்தில் கட்டாயம் வெளிவரும்.

—மானேஜர்

அனைவருக்கும் ஆனந்தம் அளிப்பது

நீலகிரி காபி

தலைமை ஆபீஸ்:
28 வெங்கடாஜல முதலி தெரு,
பி. டி. சென்னை.
கிளை: 82 நாட்டுபிள்ளையார் கோயில் தெரு,
ஜி. டி. சென்னை.
—89 பாண்டி பஜார், —
தியாகராயநகர், : : சென்னை—17.

வாழ்க்கை வர்ணனை

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப்பெண் நடிப்பதற்கு முற்பட்டால் நிச்சயம் நல்ல வெற்றி பெற முடியும். இப் பெண்ணை எப்படியாவது அழைத்துக் கொண்டு போய் நம் கம்பெனியில் சேர்த்து விட வேண்டும். ஆனால்...... ஆனால்......அதுதானே சாத்தியமில்லாத காரியம். நம் கம்பெனியில் நடிகைகளுக்கு இடமே கிடையாதே. இதற்கு என்ன செய்வது !...சரி ; அதை எப்படியாவது பிறகு சமாளித்துக் கொள்வோம். முதலில் இந்தச் 'சாமியார்' சம்மதிக்கிறாரா பார்ப்போம்" இப்படி எண்ணியபடி அந்த நடிகர் திரௌபதியின் தகப்பனாரிடம் தம் யோசனையைக் கூறினார்.

இதைக் கேட்டதும் சின்னசாமி செட்டியார் ஆச்சரியம் அடைந்தார். "இந்தக் குழந்தை நாடகம் பார்த்தது கூட இல்லையே. அதெப்படி இவள் நடிக்க முடியும் ?" என்று கேட்டார்

நடிகரோ விடுபவராக காணவில்லை. "அதைப் பற்றி உங்களுக்கேன் கவலை. நாங்கள் பயிற்சியளித்து அவளைத் தயார் செய்து கொள்ளுகிறோம்" என்று சமாதானம் கூறினார்.

இதைக் கேட்டதும் 'சாமியார்' ஆழ்ந்து யோசித்தார். 'திரௌபதிக்கு சங்கீதத்தில் ஒரே பைத்தியமா யிருக்கிறது. மேல் கொண்டு சிக்ஷை சொல்லிக் கொடுப்பதற்கோ குடும்பத்தின் தரித்திர நிலைமை குறுக்கே நிற்கிறது. நடிகரின் வேண்டுகோளுக்கு இசைந்தாலோ, திரௌபதி தன் பொழுதை வீணாக்காமல் கலைத் திறமையை விருத்தி செய்து கொள்ள முடியும். அதோடு குடும்பத்தின் தரித்திர நிலைமையும் ஒரளவு மாறும். இப்படியாக இரு வகையிலும் உதவியாக இருக்கும் என்று கண்ட சின்னசாமி செட்டியார் நடிகர் கூறிய யோசனைக்கு இணங்கினார்.

திரௌபதியை நாடகத் துறையில் ஈடுபடச் செய்வதற்கு விடாப் பிடியாய் முயற்சித்த அந்த நடிகரின் பெயர் ராஜநாயகம். அவர், டி. கே எஸ். கம்பெனியில் நடித்து—அவர்களின் நன்மதிப்பைப் பெற்ற பழைய நடிகர்.

பழனிச் சாமியாரிடம் சம்மதம் பெற்றபின் அவர் திரௌபதி விஷயத்தை டி. கே. எஸ். சகோதரர்களிடம் பிரஸ்தாபித்தார். அவர் எதிர் பார்த்தபடியே பெண்களைக் கம்பெனியில் சேர்த்துக்கொள்ளுவதற்கு முதலில் ஆட்சேபணை கிளம்பியது. ஆனால், அவர்களுக்கு ராஜநாயகம் தகுந்த சமாதானம் கூறி. திரௌபதியைக் கம்பெனியில் *(1938-ம் வருஷம்)* சேர்த்துக் கொள்ளும்படி செய்து விட்டார். அப்பொழுது திரௌபதிக்குப் பத்தே வயதுதான் ஆகியிருந்தது.

கம்பெனியில் திரௌபதிக்கும் மற்றப் பையன்களுடன் சேர்த்தே பாடம் நடத்தப் பட்டது. திரௌபதி மிக்க அக்கறையுடன் பாடங்களைக் கற்று வந்தார். இப்படிச் சில மாதங்கள் கழிந்தன. அவருக்கு முதன் முதலாக ஒரு பபூன் வேஷத்தைக் கொடுத்து மேடைக்கு அனுப்பி வைத்தார்கள். பிறகு அவருக்கு தோழி முதலான பொடி வேஷங்கள் அளிக்கப் பட்டன.

திரௌபதி தம்முடைய வேலையைத் திருப்திகரமாய்ச் செய்து, கொஞ்சம் கொஞ்சமாகக் கம்பெனியாரின் நன்மதிப்புப் பெற்று வந்தார். அவரது நன்மதிப்பு அதிகரிக்க அதிகரிக்க அவருக்கு மேலும் மேலும் சிறந்த வேஷங்கள் அளிக்கப் பட்டு வந்தன. ஒரு சமயம் அவர் "ராமாயண" நாடகத்தில் சூர்ப்பனகையாகக்கூட நடித்திருக்கிறார் ! இது அந்த நாடகத்தில் ஒரு முக்கிய பாத்திரமாகும். இப்பாத்திரத்தைப் பல எதிர்ப்புகளுக்கிடையே டி. கே. ஷண்முகம் தைரியமாக திரௌபதிக்கு அளித்தார்.

திரௌபதி விஷயத்தில் ஷண்முகம் மிகுந்த அக்கறை கொண்டார். அவருக்குத தாமே நடித்துக் காட்டி நடிக்கப் பழக்கிக் கொடுத்தார். "இன்று நான் ஒரு நக்ஷத்திரமாய் விளங்குகின்றேனென்றால் அது ஸ்ரீ. ஷண்முகம் என் விஷயத்தில் எடுத்துக் கொண்ட அக்கறையின் பலன் தான்" என்று திரௌபதி உண்மையை மறைக்காமல் கூறுகிறார்.

டி. கே. எஸ். சகோதரர்களின் பிரபல நாடகங்களான "முள்ளில் ரோஜா", "உயிரோவியம்" ஆகிய நாடகங்களில் திரௌபதி சம்பாஷணைகளை உணர்ச்சி மிகுதியுடன் பேசி, நடித்து நல்ல புகழ் பெற்றுள்ளார். தாம் ஏற்றுக் கொள்ளும்

பாத்திரத்தை நன்கு உணர்ந்து நடித்து, கொட்டகையில் கூடியுள்ளவர்கள் தம்மை மிகவும் கொண்டாடும் படி செய்து கொண்டு வந்தார்.

நாடகத் துறையில் மள மள வென முன்னேறி வந்த திரௌபதி சங்கீதத் துறையில் இறங்க வேண்டும் என்பது அவரது தகப்பனரின் விருப்பம். இரண்டொரு முறை அவர் முயற்சியும் செய்து பார்த்தார். ஆனால், இந்த முயற்சிகள் எதுவுமே பலிக்கவில்லை. அதற்குப் பதில், திரௌபதி ஒரு சினிமா நடிகையாக மாறினர்!



எம். எஸ். திரௌபதி, கணவர் பெரியசாமி, புத்ரி மீனுக்ஷி.

தற்போது பக்ஷிராஜா ஸ்டுடியோவாக விளங்கும் ஸ்டுடியோ, முன்பு பிரிமியர் ஸினிடோனகை விளங்கியது. அந்த ஸ்டுடியோவில், பி. எஸ். ராவின் டைரெக்ஷனில் டி. கே. எஸ். சகோதரர்களும் மூர்த்தி பில்ம்ஸாரும் சேர்ந்து "குமாஸ்தாவின் பெண்" என்ற படத்தைத் தயாரித்து 1941-ல் வெளியிட்டனர். இந்தப் படத்தில் எம். எஸ். திரௌபதி உள்பட டி. கே. எஸ். நாடக கோஷ்டியினர் நடித் திருக்கின்றனர். குமாஸ்தாவின் இரண்டாவது பெண் சரளாவாக நடித்திருப்பவர் திரௌபதிதான். முதல் படமாக இருந்தபோதிலும் "பரவாயில்லை" என்று சொல்லும்படியாக இருந்தது அவரது நடிப்பு. அப்பொழுது அவருக்கு வயது பதின்மூன்றுதான்.

டி. கே. எஸ். கம்பெனியில் நிரந்தர நடிகையாய் இருந்ததால் படம் முடிந்து வந்ததும் திரௌபதி அவர்களுடனேயே மீண்டும் நாடகங்களில் நடித்து வரலானர். அந்தக் காலத்தில் அவர் சினிமாவைப் பற்றி ஒருவித பயம் கொண்டிருந்தமையினுல், தொடர்ந்து சினிமாவில் நடிக்க வேண்டும் என்று ஆசைப்பட சொல்லவில்லை.

1947-ம் வருஷத்தில் டி. கே. எஸ். சகோதரர்கள் மீண்டும் சினிமாவில் ஈடுபட்டனர். பிரசித்தி பெற்ற தங்கள் "பில்ஹணு" நாடகத்தை அவர்கள் அதே பெயரில், ஷண்முகா பில்ம்ஸாரின் கூட்டுறவுடன் படமாகத் தயாரித்தனர். இம்முறை திரௌபதிக்கு கதாநாயகி (யாமினி) வேஷமே கிடைத்து விட்டது. ஆனல் மேடைமீது இந்த வேஷத்தின் மூலம் அவர் பெற்ற பெரும் புகழை "பில்ஹணு" படத்தின் மூலமும் பெற முடியவில்லை. படம் பல காரணங்களினுல் தோல்வியாக முடிந்தது.

பிறகு சிறிது காலம் திரௌபதி நாடகங்களிலேயே நடித்து வந்தார். பிறகு, ஏவி. எம்.மின் வெற்றிப் படமான "வாழ்க்கை"யில் நடிப்பதற்கு ஏற்பாடாகியது. "வாழ்க்கை" படத்தில் திரௌபதி தம் பாத்திரத்துடன் மிக ஒன்றி நடித்திருப்பதை நீங்களே பார்த்திருக்கிறீர்கள். இந்தப் படம் அவரை நக்ஷத்திரப் பதவிக்கும் ஏற்றி வைத்தது.

"வாழ்க்கை"க்குப் பிறகு திரௌபதி "திகம்பரசாமியாரி"ல் நடித்தார். இப் படத்திலும் அவருக்குப் பொருத்தமான வேஷம் கிடைத்து விட்டது. அவரது நடிப்பும் நன்ருயிருந்தது.

இவ்விரு படங்களிலும் திரௌபதி நடித்து முடித்த பின்னர், அவருக்கு சினிமா உலகில் நல்ல "மௌஸு" ஏற் பட்டு விட்டது. ஏககாலத்தில் பல பட முதலாளிகள் அவரை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதே இதற்கு அத்தாட்சி யல்லவா! ராதாகிருஷ்ணு பிலிம்ஸின் "அந்தமான் கைதி", ஸொஸைட்டி பிலிம்ஸாரின் (பெயரிடப்படாத) ஒரு படம், வள்ளி புரொடக்ஷன்ஸின் "வேலைக்காரன்", தமிழ் தெலுங்கு பாஷைகளில் தயாராகி வரும் "பசியின் கொடுமை", ஜுபிடரின் "இன்ஸ்பெக் டர்" ஆகிய படங்களில் அவர் தற் போது நடித்து வருகிருர்.

திரௌபதியின் சொந்தப் பெயர் 'சரஸ்வதி'. பெற்ருேர்களுக்கு அவர் மூன் ருவது குழந்தை. ஒரு தமக்கை, ஒரு தமையன், ஒரு தம்பி, ஒரு தங்கை ஆகி யோரைக் கூடப் பிறந்தவர்களாய் அவர் பெற்றிருக்கிருர்.

திரௌபதி தம் இளைய மாமனை பெரியசாமியை (1942-ல்) மணந்து கொண்டிருக்கிருர். பெரியசாமி முன்பு டி. கே. எஸ். கம்பெனியிலேயே மேக்கப் மென்னுயிருந்தவர். இவர்கள் மீனுட்சி என்ற ஏழு வயதான ஒரு பெண் குழந்தைக்குப் பெற்ருேராய் விளங்கு கின்றனர். திரௌபதியின் தாயார் மூன்று வருஷங்களுக்கு முன் காலமாகி விட்டார். தகப்பனர் மட்டும் சொந்த ஊரில் சகோதரர்களுடன் வசித்து வரு கிருர்.

இருபத்திமூன்று வயதான திரௌபதி மாநிறமும், நடுத்தர உயரமும் உள்ள வர். அவரது தாய் பாஷை கன்னடம். ஆனல், மூன்ருவது வகுப்பு வரையில், பள்ளியில் படித்தது தமிழில்தான். தெலுங்கு பாஷையைக் கற்றுக் கொள் ளுவதற்கு அவர் இப்பொழுது முயன்று வருகிருர். ஒரு காலத் தில் சினிமாமீது அவர் கொண்டிருந்த வெறு ப்பு இப்பொழுது நாடகங்களின் மீது திரும்பி யிருக்கிறது. டி. கே. எஸ். கம்பெனி யாரின் நாடகங்களில் மட்டும் (சந்தர்ப்பம் வாய்க்கும்போது) நடி த்துவரத் தீர்மானித் திருக்கிருர். சினிமா வானில் நடிப்பு ஒன் றின் மூலமே ஒரு நக்ஷ த்திரம் ஆகி, ஜ்வலிக்க வேண்டும் என்பதே அவரது தற்போதைய அவா. இந்த அவா பூர்த்திபெறும் என்ப தில் எனக்கு சந்தேக மில்லை. ஏனெனில், நடிப்புத் திறமை, பேச்சுவன்மை, முன் னணிக்கு வரவேண்டு மென்ற துடி துடிப்பு, இவை திரௌபதியி டம் நிறையக் காணப் படுகின்றன.

பைன் ஆர்ட் ஸென்டர் என்ற புதிய கலைக் கழகத்தின் ஆரம்பவிழா சென்னை மியூஸியம் தியேட்டரில் கனம் மந்திரி சீதாராமரெட்டியின் தலைமையில் கோலாகலமாய் நடைபெற்றது. ஸ்ரீ. கல்கி கழகத்தை ஆரம்பித்து வைத்தார். படத்தில் இவ்விருவருடன் இக்கழகத்தின் நிர்வாகிகளையும்: நடனமாடிய சாருபாலாவையும் காணலாம்.

பிரம்ம லோகம்

காதல்

இன்னும் இரண்டொரு வெளிப்புறக் காட்சிகளே படமாக்கப்பட வேண்டியிருக்கின்றனவாம். அது முடிந்தால் பரணியின் "காதல்" (தமிழ்-தெலுங்கு) படப்பிடிப்பு முடிவடைந்த மாதிரித்தானும். தெலுங்குப் படம் தெலுங்கு வருஷப் பிறப்பு வெளியீடாக இருக்குமாம். தமிழ்ப் படம் ஏப்ரல் மாதத்தில் திரையிடப்படுமாம். பானுமதி, நாகேஸ்வர ராவ், முக்கமாலா பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை ராமகிருஷ்ணா டைரெக்ட் செய்து வருகிறார். சமீபத்தில் இப்படத்தின் ஒரு பகுதியை பார்த்தேன். பானுமதி நாட்டுப்புறப் பெண்ணாய் பிரமாதமாக நடித்திருக்கிறார்.

இன்ஸ்பெக்டர்

ஜூபிடரின், தமிழ்-தெலுங்கு இரு பாஷைப் படமான "இன்ஸ்பெக்டர்" மளமள வென்று தயாராகி வரும் வேகத்தைக் கவனிக்கும் போது அது மூன்றே மாதங்களிலே திரைக்கு வந்துவிடக் கூடுமெனத் தெரிகிறது. சமீபத்தில், இப்படத்திற்கென அஞ்சலிதேவி, எஸ். ஏ. நடராஜன் சம்பந்தப்பட்ட காக்ஷி ஒன்று படமாகியது. ஆர். எஸ். மணி டைரெக்ஷனில் தயாராகி வரும் இப் படத்தில் டி. கே. எஸ். பிரதர்ஸ் நடிகர்கள் சிலரும் நடித்து வருகின்றனர்.

ரத்னதீபம்

கல்கத்தாவில் தமிழாக்கப்பட்டு வந்த 'ரத்னதீபம்'' தயாராகி விட்டதாம். அநேகமாக அது அடுத்த மாதம் தமிழ் நாட்டில் திரையிடப்படுமெனத் தெரிகிறது. இப்படத்தில் குமாரி ரத்னம் பின்னணி பாடியிருக்கிறாராம். இளம் எழுத்தாளர் எச். விஜயகுமார் சில பாட்டுகள் போட்டுக் கொடுத்திருப்பதுடன் தமது குரலையும் கொடுத்திருக்கிறாராம். குமாரி தங்கமணியின் சில நல்ல நடனங்களை இப்படத்தில் சேர்த்திருக்கிறார்களாம்.

ஏழை உழவன்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிலிம்ஸாரின் "ஏழை உழவன்'' ஜெமினியில் ஜரூராக வளரத் தொடங்கி விட்டது. கூடவே "பேதரயத்து'' என்ற பெயரில் இது தெலுங்கிலும் படமாகி வருகிறது. நாகபூஷணம் தான் இப் படத்தின் டைரெக்டர். இப்படத்திற்கென சமீபத்தில் அஞ்சலி தேவி, ஸ்ரீராம்மூர்த்தி சம்பந்தப் பட்ட காலேஜ் காட்சி ஒன்று படமாகியதாம். பி. கண்ணாம்பாவும் இப்படத்தில் நல்லதொரு பாத்திரத்தில் நடித்து வருகிறார்.

வாழப் பிறந்தவள்

ராஜகுமாரியின் சொந்தப் படமான "வாழப் பிறந்தவள்" சிட்டாடல் ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. சமீபத்தில் ஒரு கிராமாந்திரக் காட்சி இப்படத்திற்கெனப் படமாகியது. அக்காட்சியில், ராஜகுமாரி, அவர் தந்தையாக துரைசாமி, தாயாராக ராதாபாய் ஆகியோர் தோன்றினார்கள். அங்கு வில்லனாக டி. எஸ். பாலய்யா வந்து கலாட்டா செய்தார். மற்றும் இப்படத்தில் பி. எஸ். சரோஜாவும் நல்லதொரு பாத்திரத்தில் நடிக்கிறார். ராமண்ணா படத்தின் டைரெக்டர்.

மருமகள்

கிருஷ்ணா பிக்சர்ஸின் "மருமகள்" நியூட்டோனில் பிரஸாத் டைரெக்ஷனில் உருப்பெற்று வருகிறது. இப்படத்தில் நடன நடிகை பத்மினி காதலியாகவும், என். டி. ராம ராவ் காதலனாகவும் நடிக்கிறார்களாம். மற்றும் டி. ஆர். ராஜகுமாரி, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன், ஆகியோரும் நடிக்கிறார்கள்.

குமாரி

டைரெக்டர் ஆர். பத்மநாபனின் "குமாரி" நாராயணன் கம்பெனி வெளியீடாக அடுத்த மாதம் திரையிடப்படலாம் என்று தெரிகிறது. படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். ஒன்றிரண்டு ஒட்டு வேலை மட்டும் பாக்கியாம்.

பணக்காரி

உமா-ஓம் பிக்சர்ஸாரின் கூட்டுத் தயாரிப்பான "பணக்காரி" படம் கே. எஸ். கோபால கிருஷ்ணன் டைரெக்ஷனில் வளர ஆரம்பித்து விட்டது. நாகய்யா, எம். ஜி. ராமச்சந்திரன், டி. ஆர். ராஜகுமாரி, முதலியோர் நடிக்கும் படம் இது.

நடனம் ஆடினர்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சாத்விகம், இவை போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தன. "நடனம் ஆடினர்" பாட்டில் ஜதிகளுக் கேற்ற வேகத்துடனும் ஏற்றத் தாழ்வுடகளுனும் அடவுகளை அமைத்திருந்தால் இன்னும் நன்ருக சோபித்திருக்கும். அடாணு ராக "தில்லானு" கச்சிதமாகவும், சுருக்கமாகவும் அமைந்திருந்தது. நடன ஆசிரியர் டி. எஸ். ஷண்முக சுந்திரம் பிள்ளையின் நட்டு வாங்கமும், மாஸ்டர் ஸ்ரீநிவாசனின் பின்னணி கீதமும் கச்சேரிக்கு ஏற்ற முறையில் அமைந்திருந்தன.

மியூஸியம் தியேட்டரிலேயே இந்த மாதம் 9-ம் தேதியன்று ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யரின் தலைமையில் ஸ்ரீமதி ஆர். சௌந்தரத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற்றது.

வஸந்தா ராக ஜதிஸ்வரத்தில் தொகுப்புகள் எடுப்பாக அமைந்திருந்தன. "சாமிகே" என்ற நீண்ட சங்கராபரண ராக வர்ணத்தில் அடவுகளை ஆடியபோது. அபர்வு மிதுநிபால்லாகவம் குன்றியிருந்தது. "மதுரா நகரிலோ", "மாலைப் பொழுதினிலே", "எத்தனை சொன்னுலும்" முதலிய பதங்களில் சாத்விகத்தை விசேஷமாகக் குறிப்பிடலாம். கதக்களி முறையில் "ஸாரி நடனம்" உன்னதமாக அமைந்திருந்தது. ஸ்ரீமதி சௌந்தரத்தினிடம் ஆங்கிகத் திறமையைவிட சாத்விகத் திறமையே பூரணமாக அமைந்திருக்கிறது. ஆங்கிக பேதங்கள் சுத்தமாக இருந்தாலும், லாகவமும் விறுவிறுப்பும் போதிய அளவுக்குக் குறைவாய் இருந்தன. திருவிடை மருதூர் குப்பய்யா பிள்ளை, மகாலிங்கம் பிள்ளை, பரதநாட்டியத்திலும், கலாமண்டலம் வி.மாதவன் கதக்களியிலும் ஸ்ரீமதி ஆர். சௌந்தரத்திற்குப் பயிற்சி யளித்திருக்கிறார்கள். அன்று பதங்கள் பாடிய கே. எஸ். லக்ஷ்மியின் குரல் நடன பாவங்களுக்கு ஏற்றவாறு இருந்தது.

சமீபத்தில் செங்கற்பட்டில் அரங்கேறிய குமாரி பிரேமலதாவும், வஸந்தமாலாவும்.

குண்டூசி டைரி

ஜனவரி 1952

11. அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸ் "அம்மா" தமிழ்ப் படம் சென்னை நகரிலும் வெளியூர்களிலும் திரையிடப்பட்டது.

12. முற்றிலும் பெண்களே நடித்த, ஸ்ரீ கிருஷ்ண விஜய சபாவின், "சகுந்தலா" நாடகம் நடைபெற்றது.

13. டி. கே. எஸ். சகோதரர்கள் "கல்கி"யின் "கள்வனின் காதலி"யை முதல் முறையாக நடித்தனர்.

14. வாஹினி ஸ்டுடியோவில், சினிமாப் பிரமுகர்களின் மாறுவேஷத் திருவிழா நடைபெற்றது.

17. ஜெமினியிலிருந்து மேனுடுகளுக்குச் சென்ற மூவருக்கு ஸ்டுடியோவில் ஒரு வழியனுப்பு உபசாரம் நடந்தது.

24. பம்பாயில், சர்வதேச பிலிம் விழாவை செய்தி இலாகா மந்திரி ஆரம்பித்து வைத்தார்.

27. சென்னையில், நக்ஷத்திர கிரிக்கெட் ஆட்டம் நடைபெற்றது. பம்பாயில், அகில இந்திய சினிமாப் படப் பிரியர்கள் மகாநாடு ஆரம்பமாயிற்று.

வடநாட்டு நக்ஷத்திரம் ராஜ் கபூருக்கு, ஜூபிடர் சோமு தம் பங்களாவில் விருந்தளித்தார்.

134132

Printed by S. Sriramau at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras—1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 26, Godown St., Madras—1.

ரூ. 1000 ரொக்க இனம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணுயிருந்தாலும், பெண்ணுயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனுல் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடு பேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாட்டரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். அஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்த்ரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றல் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

பிப்ரவரி 9௳ முதல்
பாரகன்
பிராட்வே
NCP
நாகூர் சினி ப்ரொடக்ஷன்ஸ்
அமரகவி
டைரெக்ஷன்
F. நாகூர்
ஸ்டூடியோ
நியூடோன்
Parthan